தொகுதி II.] 1932வரு ஜூன்மீ [பகுதி 5.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமிமுதலியார்



பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மாதவி மாதவன்.

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10-0

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

AUG 1932

## 17-வது அத்தியாயம்.

——:o:——

### வக்கீல்கள்.

நாம் முன் அத்தியாத்தில் குறித்த அதே இரவில் சுமார் பன்னிரண்டு மணிக்கு இரத்தினபுரிக்கு வெளியில் ஒரு ரஸ்தாவில் கோச் வண்டி ஒன்று வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த இரவில் சந்திரன் இல்லாததால் எங்கும் ஒரே இருட்டாக இருக்கின்றது. அக் கோச் வண்டியை ஒரு ஆள் மட்டும் செலுத்திக் கொண்டிருக்கிருன். வண்டியில் கூட்டு வக்கீல்களான மனமோகனரும் தேவிதாசரும் சிறிது நேரத்துக்குமுன் அவர்கள் கலந்து கொண்ட விருந்தின் சிறப்பைப்பற்றியும், தாங்கள் நடத்த வேண்டிய பல வழக்குகளைப்பற்றியும் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மிக்க செல்வாக்குள்ளவர்களும் செல்வர்களுமானவர்களின் வழக்குகளையே எடுப்பதால் அவர்களும் செல்வர்களாகவும் செல்வாக்குடையவர்களாகவும் இருந்தனர்.

வக்கீல்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்த அந்த வண்டி ஒரு வாராவதியை விட்டு இறங்கிக் கொண்டிருந்த போது, வெகு வேகமாக ஓடிவந்த ஒரு குதிரையின்மீது சவாரி செய்துவந்த ஒரு ஆள் வண்டியின்முன் சென்று வண்டியோட்டியைப் பார்த்து, 'வண்டியை நிறுத்து' என்று அதிகார தோரணையில் கூறியதைக் கேட்டு வக்கீல்கள் இருவரும் திடுக்கிட்டுப் போயினர். அதே சமயத்தில் கையில் ஆயுதம் தாங்கிய ஒருவன் ரஸ்தா ஓரத்திலிருந்து ஒரே பாய்ச்சலாக வண்டியின்மீது பாய்ந்து வண்டியோட்டியைப் பிடித்து, அவன் எவ்வகையிலும் [illegible] தால்



18569

ஆபத்து வருமென்றும் பயமுறுத்தினன். அந்த வண்டிக் காரனும் முன்னடியே புதிதாக வந்த அம்மனிதர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவனுதலால் அவனும் அவர்களை எதிர்க்க முயற்சி செய்யாமலும் இருந்துவிட்டான்.

வண்டியோட்டியின் பீடத்துக்குச் சமீபத்தில் உட்கார்ந் திருந்தவரான தேவிதாசர், அருகிலிருந்த வண்டியின் ஜன்னலைத் தள்ளிப் பார்த்ததில் எதிரில் குதிரைமீது ஏறியிருந்த கொள்ளைக்கார உருவத்தைக் கண்டான். தேவிதாசர் சாதாரணமாகவே எதையும் மிகக் கூர்மையாகக் கவனித்துப் பார்ப்பவராயிருந்தும் அந்தக் குதிரைமீதிருந்த உருவம் ஆணு பெண்ணு என்பதைக் கண்டுபிடிக்க அப்போது அவரால் முடியவில்லை. இந்திராபாய் என்னும் மாதே அவ்வாறு ஆண் உருவம் தாங்கி அங்கு வந்திருப்பதையும் அவர் அறிந்து கொள்ளவில்லை. இந்திராபாய் அவ்வளவு பக்குவமாக வேடம் அணிந்திருந்தாள். தேவிதாசர் அவ் வுருவத்தைப் பார்த்ததும் இவ்வளவு பெரிய கொள்ளைகளை நடத்தக்கூடிய அவ்வளவு பலம் பொருந்தியதாக அந்த ஆள் இருக்கவில்லை என்பதை மட்டும் அவர் உணர்ந்தார். அதற்குமேல் எதையும் நினைக்க அவருக்குச் சாவகாசமில்லை. ஏனெனின் இதற்குள் குதிரைமீது ஆண்வேடம் தாங்கி அமர்ந்திருந்த இந்திராபாய் அவரிடமிருந்த பணப்பையையும் நகைகளையும் கீழே வைக்கும்படி கட்டளையிட்டாள்.

அந்த வண்டியில் இரு கனவான்கள் உட்கார்ந்திருப்பார்கள் என்று அவள் நினைக்கவேயில்லை. ஆதலின் அதில் அவள் இருவரைக் கண்டதும் அவர்கள் தன்னை எதிர்ப்பார்களென்று அவள் தன் சட்டைப் பையிலிருந்த, கெட்டிக்கப்பட்ட கைத்துப்பாக்கியை எடுத்து வண்டியின் ஜன்னல் வழியே வண்டியில் நீட்டித் தன் பெண் குரல் தெரியாதிருக்

கும் பொருட்டு முரட்டுத்தனமான கர்ஜனையில், 'கனவான்களே! தாமதம் வேண்டாம். ஆகட்டும்; விரைவில் உங்கள் பணப்பைகளையும் நகைகளையும் கீழே வையுங்கள்' என்று கூறினாள். அதைக் கேட்ட தேவிதாசர் தைரியத்துடன், 'இல்லை. கழற்றிவைக்க முடியவே முடியாது. நான் இந்த மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சுபவன் அல்ல. சண்டை போட்டு அதில் நீ வெற்றி பெற்றால்தான் எங்கள் உடைமையைப் பெறமுடியும்' என்று எதிர்த்துப் பேசிக்கொண்டே அவர் கையில் ஒரு தடியுடன் வண்டியைவிட்டுக் கீழே குதித்தார்.

வண்டியின் கதவு திடீரென்று திறக்கப்பட்டதாலும், ஒரு மனிதர் எதிர்பாராத வகையில் அதிலிருந்து குதித்ததாலும் எதிரிலிருந்த குதிரை மிரண்டு முன்னும் பின்னுமாக ஓடலாயிற்று. இந்திராபாயும் இத்தகைய திடீம்பிரவேசமான எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லை யாதலால் மனக்குழப்பமடைந்துவிட்டாள். அப்போது தேவிதாசர் குதிரையின் லகாமைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் இந்திராபாயின் கையிலிருந்த கைத்துப்பாக்கியைப் பிடுங்கினார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த, சிறிது வயதானவரான மனமோகனர், தன் நண்பரின் தைரியத்தைக் கண்டு ஆறுதலடைந்து தானும் வண்டியைவிட்டுக் கீழே குதித்து வண்டியோட்டியின் பக்கத்தில் அமர்ந்திருந்த ராட்சஸ குப்பனுடைய கால்களைப் பிடித்து இழுத்தார். குதிரைமீதிருந்து கீழே விழுந்த இந்திராபாய் அசையாமல் இறந்தவள்போல் கிடந்ததால் மனமோகனர் அவளிடம் போகாமல் குப்பனைப் பிடித்திழுத்தார்.

அப்போது தேவிதாசர் இந்திராபாயைச் சுட்டிக்காட்டி, 'அந்த அயோக்கியப் பையல் இறந்து விட்டான்போ லிருக்

கிறது' என்று கூறினர். அச்சமயத்தில் ராஸ்சஸ குப்பன், 'அப்படியா' என்று கர்ஜனைசெய்துகொண்டே மனமோகனர் பிடியினின்றும் தன்னை விலக்கிக்கொண்டு மிக அவசரமாக இந்திராபாய் இருக்கும் திசையை நோக்கி ஓடிப் பிறகு ஓடி விட்டான். அவன் திடீரென்று தன்னை விலக்கிக்கொண்டதால் மனமோகனரும் அதிர்ச்சி யடைந்து கீழே விழுந்தாரென்றாலும் மிக அவசரமாக எழுந்து சிறிதும் அச்சமடையாதவர்போல் நின்றார். அவ்வேளையில் தன்னுடைய கூட்டாளியான தேவிதாசர், கீழே விழுந்த ஆள் இறந்து விட்டது வாஸ்தவமா என்று அறியும்பொருட்டுக் குனிந்து கவனித்தவர் திடீரென்று, 'ஓஹோ! இதென்ன ஆச்சர்யம்! இத்தப் பேர்வழி ஒரு பெண்ணைக வல்லவோ தோன்றுகிறது' என்று சொன்னதைக் கேட்டு மனமோகனரும் ஆச்சர்ய மடைந்தார். மேலும் அவர் அவளருகில் சென்று முக மூடியை எடுத்துப் பார்த்து, 'ஓ! பெண்தான் அதிலும் அழகான ஒரு மாதே—என்? இம்மாதையும் இவளுடைய குதிரையையும் நான் பார்த்திருப்பதாகவும் ஞாபகம் இருக்கிறது. வண்டியோட்டியே! உனக்கும் இம்மாது தெரியுமல்லவா?' என்று ஏதோதோ பேச ஆரம்பித்தார்.

அப்போது தேவிதாசர் மிக்க ஆத்திரத்துடன், 'இப்போது ஒன்றும் கேள்விகள் கேட்க வேண்டாம். அவள் உயிருடன் இருக்கிறாளல்லவா, ஆம்; கண்களைத் திறந்து பார்க்கிறாளே' என்றார். உண்மையிலேயே அவளும் உயிருடனேயே இருந்தாள். திடீரென்று எதிர்பாராத வகையில் குதிரை மீதிருந்து விழுந்ததால் அதிர்ச்சி யடைந்து பிரக்ஞை தப்பி யிருந்ததே யொழிய வேறொன்று மில்லை. சொற்ப நேரத்துக்குள் அவள் களைப்புத் தீர்ந்து சித்த சுவாதீனத்தை யடைந்து தன் நிலைமை என்ன என்பதையும், தான் இரண்டு

வக்கீல்களிடம் சிறைப்பட்டிருப்பதையும் அறிந்தாள். அப்போது தேவிதாசர் அவளிடம் இரக்கங்கொண்டு, 'மாதே! உனக்கு ஏதேனும் அதிகமாகக் காயம்பட் டிருக்கிறதோ' என்று விசாரித்தார்.

இந்திராபாய் மெதுவாக நின்று, 'இல்லை. அப்படி யொன்றும் அதிகமாகக் காயம் படவில்லை' என்று கூறிக் கொண்டே தப்பி ஓடிவிடும் எண்ணத்துடன் நாற்புறங்களி லும் சுற்றிப்பார்த்தாள். தேவிதாசர் உடனே அவளது சொக் காயைப் பிடித்துக்கொண்டார். அதைக்கண்ட மனமோக னரும் அவளது கையைப் பிடித்துக் கொண்டார். தேவி தாசர், 'உன்னுடைய இந்தச் செய்கையை அலட்சியமாகக் கருதிவிட முடியாது' என்று கூறினர். உடனே மனமோக னரும், 'ஆம், ஆம். விட முடியாது நாங்கள் வக்கீல்கள் என் னும் முறையில் சட்டத்தை மதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு கொடிய செயலைச் செய்த ஆளைவிட்டு விடுவது சட்டப்படி தவருகும்' என்று சொன்னர்.

அப்போது இந்திராபாய் நிதானமாக, 'இப்போதுள்ள சந்தர்ப்பத்தில் நீங்கள் தாராளமாக நடந்து கொள்வீர்க ளென்று எதிர்பார்க்க முடியாது. நானும் என்னை மன்னிக் கும்படி கேட்கவில்லை. ஆதலின் என்னை உங்களிஷ்டப்படி நீங்கள் செய்து கொள்ளலாம்' என்று உறுதியுடன் கூறினள். அவளது உறுதியையும் தைரியத்தையும் கண்டு அந்த இரு வக்கீல்களும் ஆச்சர்ய மடைந்தனர். அவளை என்ன செய் வது என்று அவர்களிருவரும் யோசித்து இறுதியில் அவ ளைப் போலீசாரிடம் ஒப்படைப்பதென முடிவு செய்தனர். அச்சமயம் மனமோகனர், 'மாதே! உன்னை நான் நீண்ட காலமாகவே அறிவேன். இந்த ரஸ்தாவில் நீ பெண் உரு வத்துடன் இக்குதிரையின் மீது சவாரி செய்வதைப் பார்த்

திருக்கிறேன். என்ன? என் வண்டிக்காரன் கூட உன்னைப் பற்றி ஏதோ சொல்லி யிருக்கிறான்' என்றார்.

மோசக்காரனான வண்டிக்காரனுடைய வஞ்சனை வெளியாய் விடுமே என்னும் அச்சத்தினாலும், அவனை அவனுடைய எஜமானன் ஒன்றும் அதிகமாகக் கேட்காமலிருக்கும் பொருட்டும் இந்திராபாய் மிக்க சாமர்த்தியத்துடன், 'ஐயா! நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். இந்த இடத்துக்கு மிகச் சமீபத்திலுள்ள டிவிஷனில்தான் நான் சந்திராபாய் என்னும் பெயருடன் வசித்து வருகிறேன். நான் என்னை மன்னித்துவிட்டுவிடும்படி கேட்டுக்கொள்ளவில்லை யென்றாலும் ஒரு உதவிமட்டும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது என்னைப் போலீசாரிடம் ஒப்புவிப்பதற்கு முன் என் இருப்பிடத்துக்குப்போய் வர அனுமதி யளிக்க வேண்டும். ஏனெனின் நான் என்னுடைய நிலைமையை என் வேலைக்காரியிடம் தெரிவிக்கவேண்டுமல்லவா?' என்று தெரிவித்துக்கொண்டாள்.

அப்போது மனமோகனர் தேவிதாசரைப் பார்த்து, 'ஐயா! உம்முடைய அபிப்பிராயமென்ன? அவள் கோருகிறபடியே அனுமதிப்பதில் எத்தகைய குற்றமுமில்லை என்று நினைக்கிறேன்' என்றார். அதற்குத் தேவி தாசரும், 'நானும் அம்மாதினிடம் கடுமையாகவோ கண்டிப்பாகவோ நடந்து கொள்ள விரும்பவில்லை? என்றார். உடனே இந்திராபாயும், 'அதோ இடது கைப்பக்கம் மரங்களுக்கிடையில் ஒரு வெண்மையான கட்டடம் காணப்படுகிறதே அதுதான் என் விடுதி. சமீபத்தில்தான் இருக்கிறது' என்று கூறிக்கொண்டே தன் மெல்லிய கரத்தை நீட்டி அவ்விடத்தைக் காண்பித்தாள். அப்போது மனமோகனர், 'சரி, நாமனைவரும் அங்கு போக வேண்டியதுதான். குதிரையை வண்டியின் பின்னால் கட்டி

விடுகிறேன். இக்குதிரையை நான் முன்னமே பலமுறை பார்த்து இதன் அழகையும் நடையையும் கண்டு பாராட்டியுமிருக்கிறேன். ஆனால் இது ஒரு கொள்ளைத் தொழிலுக்கு அதிலும் ஒரு கொள்ளைக்காரிக்குப் பயன்படுகிறதென்பதை நான் இதுவரை அறியேன்,' என்று கூறிக்கொண்டே இந்திராபாயின் குதிரையை வண்டியின் பின்னால் கட்டிவிட்டார்.

பிறகு அந்த இரு வக்கீல்களும் 'சேர்ந்துகொண்டு இந்திராபாயை வண்டியிலேறும்படி கட்டளையிட்டனர். அவளும் ஒன்றும் பேசாமல் தன் நிலைமையை உணர்ந்து அதில் ஏறினாள். பின்னாலேயே அவ்விரு வக்கீல்களும் வண்டியில் ஏறி அதன் கதவை மூடிக்கொண்டனர். வண்டியும் வேகமாகச் செல்லத் தொடங்கிற்று.

சொற்ப நேரத்துக்குள் அவ்வண்டி, இந்திராபாய் காட்டிய வீட்டையடைந்தது. அக்கட்டடம் பார்வைக்கு மிக அழகானதாக இருந்தது. அப்போது மனமோகனர் வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டே, 'இத்தகைய கட்டடத்தில் வசிக்கும் ஒருமாது இவ்வாறு கொள்ளைக்காரியாக இருப்பாளென்று யாரேனும் நினைப்பரோ ? இந்திராபாய் ! நீ இவ்வளவு அழகானவளாயும் இளம் வயதினளாயும் இருந்தும் இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டிருப்பது கண்டு நீ வெட்கப்படவேண்டாமா ?' என்று கண்டித்துப் பேசினர். அச்சமயம் வண்டியைவிட்டு இறங்க முயற்சித்த இந்திராபாயின் கையைப் பிடித்துக்கொண்ட வண்ணம் தேவிதாசர், 'ஐயா! நாம் என் அவளைக் கண்டிக்கவேண்டும். இதோ இன்னும் சொற்ப நேரத்துக்குள் அவள் தண்டிக்கப்படுவாள் என்பது நிச்சயம்' என்று கூறினர்.

அப்போது இந்திராபாய், 'ஐயன்மீர் ! என் குதிரையை அதன் லாயத்தில் கொண்டு போய்க் கட்ட எனக்கு அனு

மதி கொடுப்பீர்களா? அதற்கென்று எனக்கொரு சேவகன் இல்லை. அதோ தூரத்திலிருக்கிற அந்தக் குடிசையில் வசிக்கும் மனிதனே இதைக் கவனிப்பது வழக்கம்' என்று கேட்டாள். அதற்கு மனமோகனர், 'ஆஹா! அப்படியே ஆகட்டும், எங்களுக்கும் குதிரைக்கும் எத்தகைய தகாரறும் கிடையாது. நானே கொண்டுபோய்க் கட்டிவிட்டு வருகிறேன்' என்றார்.

அச்சமயத்தில் அவ்வீட்டின் கதவு திறக்கப்பட்டது. சுமார் முப்பது வயதுள்ள ஒருமாது அக்கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். அவள், பார்வைக்கு ஏதோ கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள் போல் காணப்பட்டாள். அங்கிருந்த விளக்கு வெளிச்சத்தில் அவள் வண்டியோட்டியையும் வண்டியோட்டி அவளையுமாகப் பரஸ்பரம் விரைவில் பார்த்துக் கொண்டார்கள். இதை இந்திராபாய் கவனித்தாளே யொழிய அந்த இரு வக்கீல்களும் அறியவில்லை. அப்போது இந்திராபாய், 'புஷ்பவல்லி! அச்சப்படாதே. இப்போது நான் சிறிதுசங் கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நான் இந்தக் கனவான்களுடன் போகவேண்டி யிருக்கிறது. நான் என் குதிரை மீதிருந்து விழுந்து விட்டதால் வலது காலில் கொஞ்சம் காயம்பட்டிருக்கிறது. அதனால் கொஞ்சம் இரத்தமும் வந்து கொண்டிருக்கிறது. ஆயினும் பாதகமில்லை' என்றாள்.

அப்போது புஷ்பவல்லி என்னும் அம்மாது மிகவும் துயரப்படுவள்போல் ஒரே பாய்ச்சலாய் இந்திராபாயின் அருகில் பாய்ந்து இருகாங்களையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு, 'ஓ, என தன்புள்ள எஜமானியே! ஐயோ கடவுளே! உனது காலில் இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறதே' என்று அவள் காலைப் பார்த்துக்கொண்டே கூறினாள். அதைக்கேட்ட

தேவிதாசர், 'அப்படியானால் உன் வேலைக்காரி உனது காலைப் பரிசோதித்துப் பார்த்து அதற்கு ஏதேனும் மருந்து போடு வதற்கு நாம் சாவகாசம் அளிக்கவேண்டியதுதான். உனக்கு அநாவசியமாகக் கஷ்டத்தை யுண்டாக்க நாம் விரும்பவில்லை யென்று முன்னமே கூறி யிருக்கிற னல்லவா?' என்று சொன்னார். அதுகண்ட இந்திராபாய், 'ஐயா, உங்களுடைய காருண்யத்தை நான் பாராட்டுவதுடன் அதற்காக வந்தன மும் செலுத்துகின்றேன்' என்று உண்மையிலேயே மன மாரக் கூறுபவள்போல் சொன்னாள்.

இதற்குள் மனமோகனர் இந்திராபாயின் குதிரையை அதன் லாயத்தில் கட்டிவிட்டு மற்றவர்கள் இருந்த இடத் துக்கு வந்து சேர்ந்தார். பிறகு அனைவருமாக அந்தக்கட்ட டத்தில் நுழைந்தனர். அதிலிருந்த ஒரு அலங்காரமான அறை யில் அவ்விரு வக்கீல்களையும் உட்கார வைத்தனர். அவ் வறையின் அழகையும் நாகரிகத்தையும் அதிலிருந்த சாமான் களையும் கண்டு அந்த இருகனவான்களும் ஆச்சர்ய மடைந்து ஒருவரை யொருவர் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர். அவ் வறையில் சங்கீதக் கருவிகளும், சில உயர்தர சிலைகளும் இருக்கக் கண்டனர். அங்குச் சென்றபின்னர் இந்திராபாய் அவ்விருகனவான்களையும் பார்த்து, 'ஐயன்மீர்! நான் எனது வேலைக்காரியுடன் மேல் மாடியிலுள்ள அறைக்குச் சென்று சொற்பநேரம் பேச அனுமதி யளிப்பீர்களா?' என்று கேட் டாள்.

அப்போது மனமோகனர், 'ஆ, நீ தப்பித்து ஓடி விட மாட்டாய் என்பதற்கு எங்களுக்கு என்ன அத்தாட்சி இருக் கிறது?' என்று கேட்டார். அதற்கு அவள், 'என்ன அத் தாட்சி கூறுவதென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. மாடியில் என் அறைக்கு வெளியில் நீங்கள் நின்று கொண்டு

நான் வெளியே போகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். அதைத் தவிர வேறு வழியில்லை' என்றாள். தேவிதாசரும், 'அப்படித்தான் செய்வோம். வேறு என்ன செய்வது' என்று கூறி இந்திராபாயின் இஷ்டப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டனர். புஷ்பவல்லி வழிகாட்டிச் செல்ல இந்திராபாய் மத்தியிலும் அவளது இருபக்கங்களிலும் இருவக்கீல்களுமாக மாடிக்குச் சென்றனர். இந்திராபாயின் அறை சமீபித்ததும் அவள், 'ஐயன்மீர்! இதுதான் என் அறை இந்த வாயிலின் வழியேதான் மறுபடியும் வெளியே வர வேண்டுமே யொழிய வேறு வழியில்லை என்பதை நீங்களே பார்த்து விடுங்கள்' என்றாள். மனமோகனரும் அவள் கூறியபடியே அவ்வறையில் நுழைந்து நான்கு பக்கத்திலும் பார்த்து ஜன்னல் வழியே குதித்தாலொழிய வேறு வழியில்லை யென்று தெரிந்து கொண்டார்.

பின்னர் இருவக்கீல்களும் அவ்வறையின் வாயிலின் வெளிப்பக்கத்தில் நிற்க இந்திராபாயும் அவளது வேலைக்காரி புஷ்பவல்லியும் அறையில் சென்று கதவை மூடிக் கொண்டனர். இந்திராபாயின் கட்டிலின் மீது புஷ்பவல்லி உரத்த குரலில், 'ஐயோ, எனது எஜமானியே! உனக்கென்ன கெட்ட காலமோ? இவ்வாறு காலில் நல்ல அடிபட்டு இரத்தம் பெருகிக் கொண்டிருக்கிறதே. இப்போதே இதற்கு மருந்து போடாவிட்டால் இரணஜன்னி பிறந்து நீ சாக வேண்டியதுதான். நீ கீழே விழும்படி என்ன நேர்ந்தது? இப்போது வலியினால் அவஸ்தைப்படுவதால் இந்த விவரத்தை யெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்போது மருந்து போட்டுக்கொள்?' என்று கத்திக் கொண்டே இருந்தாள். உண்மையில் இந்திராபாய்க்குக் காயம் படவுமில்லை; புஷ்பவல்லி மருந்து போட்டுக்கொண்

டிருக்கவுமில்லை. வெளியில் நிற்கும் வக்கீல்களை ஏமாற்றவே இவ்வாறு செய்யப்பட்டது. இதற்குள் இந்திராபாய் ஒரு கடிதமெடுத்து அதில் எதையோ எழுதி மடித்துத் தான் அருமையாக வளர்க்கும் ஒரு பஞ்சவர்ணப் புறாவை அதன் கூண்டிலிருந்து எடுத்து அக் கடிதத்தை அதன் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டு அதற்குப் பால் குடிக்கக் கொடுத்து முத்தமிட்டு சீராட்டி முடிந்ததும், மெதுவாக ஜன்னல் கதவைத் திறந்து அப்புறாவை வெளியேவிட்டாள். அதுவும் சரேலென்று வேகமாகப் பறந்தோடிற்று. இந்திராபாய் ஜன்னல் திறக்கும்போது அதன் சத்தம் வெளியிலுள்ள வக்கீல்களுக்குத் தெரியாமலிருக்கும் பொருட்டு புஷ்பவல்லி அங்கிருந்த சாமான்களின் மீதெல்லாம் பிரம்பினலடித்துச் சத்தம் செய்து கொண்டிருந்தாள்.

புறாவை வெளியே அனுப்பிய பின்னர் இந்திராபாயும் புஷ்பவல்லியுமாகச் சேர்ந்து கொண்டு அங்கிருந்த பெரிய இரண்டு துப்பட்டிகளை எடுத்து ஒன்றுடன் மற்றொன்றை முடிபோட்டு நீளமானதாக்கி அதன் ஒரு முனையை ஜன்னல் கம்பிக்கு இறுகக் கட்டிவிட்டு மற்றொரு முனையைக் கீழே தொங்கவிட்டனர். உடனே இந்திராபாய் புஷ்பவல்லியைப் பார்த்து, 'நான் இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள் திரும்பி வந்துவிடுவேன். பயப்படாமல் இரு' என்று சொல்லிவிட்டு அந்த துப்பட்டியைப் பிடித்துக் கொண்டு பக்குவமாக ஜன்னலின் வழியே கீழே இறங்கிக் குதிரை லாயத்துக்குச் சென்று தன் குதிரையை அவிழ்த்துக் கொண்டு அதன்மீது ஏறி உட்கார்ந்து ஒரு முறை தட்டிக் கொடுத்ததும் அக் குதிரை வாயுவேக மனோவேகமாகப் பறக்கத் தொடங்கிற்று.

இப்போது நாம் மேலே கூறிய விவரமெல்லாம் நடைபெற பதினைந்து நிமிஷங்கள் தான் பிடித்தன. ஆகவே இக்

சென்னை-600 069

திராபாயின் அறைக்கு வெளியில் காத்திருந்த வக்கீல்கள் ஒன்றும் சந்தேகப்படாமல் காலில்பட்ட காயத்துக்கு மருந்து போட பதினைந்து நிமிஷம் வேண்டுமல்லவா? என்று இருந்து விட்டனர். ஆனால் கீழே குதிரை லாயத்திலிருந்து குதிரை வெளிப்பட்ட சத்தம் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டு இதில் ஏதோ சூது இருக்கவேண்டுமென நினைத்துப் பலாத்காரமாக அவ்வறையில் நுழைந்து பார்த்ததில் அப்போதுதான் புஷ்ப வல்லியும் ஜன்னலுக்கு வெளியில் தொங்கிக் கொண்டிருந்த துப்பட்டியை உட்புறத்தில் இழுத்துக்கொண் டிருப்பதையும் கண்டு ஆத்திரமடைந்து புஷ்பவல்லியைப் பார்த்து, 'அடி பாவி! அவள் தப்பிச் செல்வதற்கு நீயே காரணமாய் இருந்த படியால் அவளுக்குப் பதிலாக நீதான் அத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்' என்று கூறினார்கள். இதற்குள் எதையோ நினைத்துக் கொண்டதைப்போல், 'இல்லை, இல்லை. குற்றவாளி வேறு ஒருவன் இருக்கிறான். அவனைக் கண் டிக்க வேண்டும்' என்று கூறிக்கொண்டே சாசாவென்று மாளிகையை விட்டிறங்கி குதிரை லாயத்தில் படுத்திருந்த மனமோகனரின் வண்டிக்காரனை அவன் ஏன் எச்சரிக்கை செய்திருக்கக்கூடாதெனப் பலவாறு திட்டினர். ஆனால் அவன் ஏதோ பொருத்தமான சமாதானம் கூறிவிட்டான்.

பிறகு வக்கீல்களிருவரும் ஏமாற்றமடைந்தவராய் வெளி யில் சொல்லிக் கொள்ளவும் வெட்கமடைந்தவராய் என்ன செய்வதென்று யோசனை செய்ததில் அவள் சட்டத்துக்குட் படாமல் தப்பித்துக் கொள்வதற்காக அயல் நாடுகளுக்குப் போய்விட முயற்சிப்பாளென்றும் ஆதலின் துறைமுகப் பட் டணங்களாகிய [illegible]க்கு ஒருவரும் காச்சிக்கு ஒருவரு மாக உடனே புறப்பட்டுச் செல்வதென்றும், சட்டப்படி தண்டனை அனுபவிக்க வேண்டிய அவள் தப்பித்துச் செல்

லும்படி வக்கீல்களாகிய அவர்கள் விடமுடியாதென்றும் தீர்மானித்துக் கொண்டு தங்கள் வண்டியில் ஏறி மனமோகனரின் மாளிகைக்குச் சென்று சேர்ந்தனர்.

## 18-வது அத்தியாயம்

### தூது சென்ற புறு

இப்போது நாம், இந்திராபாயினால் அனுப்பப்பட்ட அழகிய பஞ்சவர்ணப் புறு எங்கு சென்றது என்பதைக் கவனிப்போம். இரத்தினபுரியின் மற்றொரு பாகத்தில் முக்கிய ரஸ்தாவின் அருகில் ஒரு தனிமையான இடத்தில் வழிப்போக்கர்கள் வந்து தங்கும்படி ஒரு விடுதி இருந்தது. அவ்விடுதியின் சொந்தக்காரன் நடுக் குப்பத்திலுள்ள கோபாலனுடைய சகோதரன் வேலன். அவனும் கோபாலனைப்போலவே காலங்கழித்து வந்தான். கொள்ளையடிக்கப்படும் சாமான்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்றும், அங்கு வந்து கூடும் பலவிதமான அயோக்கியர்களுக்கும் இடம் தந்து அதற்காக அவர்களிடமிருந்து வாடகை வாங்கியும் அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஜீவித்து வந்தான். வேலன் மனைவியை இழந்தவன். அவனுக்கு சுமார் முப்பது வயதான ஒரு பெண் மட்டும் இருந்தாள். அவளுக்கு எல்லம்மாள் என்பது பெயராயினும் எல்லாரும் அவளை எல்லி என்று கூப்பிடுவது வழக்கம்.

வேலன் தினசரி அவ்விடுதியின் கீழ்க் கட்டில் ஒரு சிறு அறையில் படுப்பது வழக்கம். ஆனால் எல்லி என்னும் அப்பெண் மேல் மாடியில் ஒரு கூடத்தில் படுத்துக்கொள்வாள்.

அக் கூடத்துக்குப் பக்கத்தில் திறந்த வெளி இருக்கும். தாழ் வாரத்தில் ஒரு மரப் பலகையை வைத்து அதன் பக்கத்தில் அப் பலகை அசைந்தால் ஆடி சத்தம் உண்டாகும்படி ஒரு மணியும் வைக்கப்பட்டிருக்கும். அம் மணி அடித்து சத்தம் உண்டானல் உடனே எல்ஸி விழித்துக்கொள்வாள். நாம் இப்போது குறிப்பிடும் அன்றிரவும் மேற்கூறிய விதமா கவே வேலனும் எல்லியும் படுத்திருந்தார்கள். விடியற்காலம் மணி இரண்டு இருக்கும். அந்த மணியடித்த சத்தம் கேட் கவே எல்ஸி விழித்துக்கொண்டாள். அங்கு பஞ்சவர்ணப் புரு மரப் பலகையின்மீது உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். உடனே அவள் தன் கையை நீட்டியதும் அப்பறவையும் தனக்குப் பழக்கமான ஒருவரிடம் பழகுவதேபோல் அவ ளருகில் அடக்கமாக உட்கார்ந்தது. அவள் அதைச் சீராட் டிப் பாராட்டி ஆகாரமளித்துப் பின்னர் அதன் கழுத்தில் கட்டியிருந்த கடிதத்துண்டை எடுத்துப் படித்துப் பார்த்து அதிலுள்ள விஷயத்தைத் தெரிந்துகொண்டு அதன்மீது மை யினுல் ஒரு கோடு இழுத்துப் பின்னர் பழையபடியே அதைச் சுருட்டி அப் பறவையின் இறக்கையில் வைத்து மடித்து அதை அனுப்பிவிட்டாள்.

பிறகு அவள் உடைகளை நன்றாக அணிந்துகொண்டு கீழே இறங்கிவந்து தன் தகப்பனிடம் சென்று, 'அப்பா! இந்திராபாய் ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறுள். நீ ஒரு குதிரையைத் தயாராக வைத்திருக்கவேண்டுமாம். இரண்டு மணிக்கு இருபது நிமிஷம் இருக்கும்போதே அது அனுப் பப்பட்டது. இப்போது இரண்டு மணியடித்துப் பதினைந்து நிமிஷமாயிற்று' என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட வேலன், 'சரி, நீ போய்ப் படுத்துக்கொள். நான் உடைகளை யணிந்து குதிரையைத் தயாரித்து அவளுக்காகக் காத்துக்

கொண்டிருக்கிறேன்' என்றான். எல்லியும் தன் தந்தையின் கட்டளையின்படியே மாடிமீது சென்று படுத்துறங்கிவிட்டாள்.

அங்கிருந்து புறப்பட்ட அப்பறவை வெகு வேகமாகப் பறந்து சென்று இரத்தினபுரிக்கு நான்கு மைல் தூரத்தி லுள்ள கந்தபுரிக்கடுத்த பெரிய ரஸ்தாவின் ஓரத்தில் இருந்த சேர்வாரயன் குன்று என்னும் பெரிய குன்றின்மீது தனியாகக் கட்டப்பட்ட ஒரு கட்டடத்துக்குச் சென்றது. அக் கட்டடம் பார்வைக்கோ விகாரமானதாயும், அச்சத்தைத் தரத்தக்கதாயும் இருந்தது. கையில் சிறிது பொருளுடைய யாரும் அங்கு இரவில் தங்க தைரியம் கொள்ளமாட்டார்கள். அவ்விடுதியின் சொந்தக்காரர் தொம்மன் தம்பதிகள். அவர்களும் கோபாலன் தம்பதிகளைப் போலவும், வேலனைப் போலவும் திருட்டுச் சொத்துக்களை வாங்கி விற்பதிலும், தங்கள் விடுதியில் தங்குவோரிடம் வாடகை வாங்கியும் ஜீவனம் செய்து வந்தனர். அவர்களுக்கு ஒரு குமாரன் இருந்தான். அவன் பெயர் ஜோயி. அவன் மிக்க கூர்மையான அறிவும், தந்திர சாமர்த்தியங்களும் உடையவன். தன் பெற்றோர்கள் செய்யும் தொழிலில் அதிக அனுபவமும் சாமர்த்தியமும் வாய்ந்தவன். அந்தப் பையன் அக்கட்டடத்தின் மாடிமீது திறந்த வெளியில் படுப்பது வழக்கம். அங்கேயும் வேலனுடைய விடுதியில் எல்லியின் படுக்கைக்குப் பக்கத்தில் மரப் பலகை ஜோடிக்கப்பட்டிருந்தது போலவே ஒரு பலகை அமைக்கப்பட்டிருந்தது. இக் கட்டடத்துக்கு வந்த புறா அப் பலகையின்மீது உட்காரவும், அதனால் மணியடிக்கும் சத்தம் கேட்கவும் ஜோயி என்னும் அப் பையன் விழித்துக் கொண்டான்.

அப்போது மணி இரண்டரை. அவன் அப்புறாவை

அன்புடன் வரவேற்று அதற்கு வேண்டிய ஆகாரமளித்து அதன் இறகின் மறைவிலிருந்த கடிதத்தைப் பார்த்துவிட்டு அவனும் எல்லியைப்போலவே அக்கடிதத்தில் மையினுல் ஒரு கோடு இழுத்துவிட்டு அதைப் பழையபடியே மடித்து அப்புறாவின் இறகில் மறைத்துவைத்து அதை அனுப்பிவிட்டான். பிறகு அவன் கீழே இறங்கி வந்து தன் தந்தையினிடம் இந்திராபாயிடமிருந்து கிடைத்த செய்தியைத் தெரிவித்தான். அங்கிருந்து புறப்பட்ட அப்புறா மூன்றுவதாகச் சென்ற இடத்தைக் கவனிப்போம். அந்த இடம் துறைமுகப்பட்டணமாகிய நாகபுரி. அதன் முக்கிய தெருக்களில் ஒன்றில் ஒரு அழகிய ஓட்டல் வைக்கப்பட்டிருந்தது. அதன் சொந்தக்காரர் முருகேசன் என்பவன். அவன் இளம் வயதில் இரத்தினபுரி ராஜ்யத்தில் கப்பல் தலைவனுக வேலை செய்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு இந்த ஓட்டலை வைத்திருந்தான். அவன் பற்பல பொதுச் சங்கங்களிலும் சேர்ந்து கொண்டு உழைத்தபடியாலும், பணக்காரனைப்போல் வாழ்க்கையை நடத்தித் தன்னுலியன்ற தான தருமங்களைச் செய்து வந்ததாலும் அந்நகரில் அவனுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அவன் அன்னிய தேசங்களிலிருந்து பலவிதமான சாமான்களையெல்லாம் சுங்கவரி செலுத்தாமலே மிகச் சாமர்த்தியமாக வரவழைத்துக் கொண்டாலும் அதைப்பற்றி யாரும் ஒன்றும் பேசமாட்டார்கள். ஏனெனின் யாரேனும் எதை யாவது பேசினுல் அந்நகரிலுள்ள பெரிய மனிதர்களே அவனுக்குச் சார்பாகப் பேசி அதைக் கண்டிப்பார்கள்.

இந்த முருகேசனுக்கு மூன்று பெண்கள் இருந்தனர். அவர்களனைவருமே அழகும் ஆற்றலும் வாய்ந்தவர்கள். அவர்கள் பதினெட்டு முதல் இருபத்து நான்கு வயதுக்குட்பட்டவர்களாக இருந்தனர். மூத்த குமாரிக்கு கமலவதி என்று

பெயர். அவள்தான் மற்றவர்களைவிட அதிக புத்திசாலியாத லால் அந்த ஓட்டலின் நிர்வாகங்களை யெல்லாம் அவளே கவனித்து வந்தாள். அவள் புரு, வாத்து, கிளிபோன்ற அழகியதும், சாதுவுமான பறவைகளை வளர்ப்பதில் அதிக ஆவலுடையவள். அவைகளை வளர்ப்பதால் அவை சிற்சில சமயங்களில் அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளின் கூரைமீது உட்கார்ந்து அவற்றைக் கெடுத்துவிடுமாயினும் முருகேசன் அதனாலேற்படக்கூடிய நஷ்டத்தைக் கொடுத்துவிடுவான் என்று ஜனங்கள் நம்பியதால் அதைப்பற்றிக் கவலை கொள்ளாமல் இருந்தனர். கமலவதியும், எல்லியும் ஜோயியும் எவ்வாறு அவரவர்களுடைய வீட்டு மேல்மாடியில் படுத்து மரப் பலகையை அமைத்துக் கொண்டிருந்தார்களோ அது போலவே மாடியில் படுத்திருந்தாள். பஞ்சவர்ணப் புரு அங்கு மரப்பலகையின்மீது வந்து உட்கார்ந்ததும் மணியடித்த சத்தம் கேட்டதால் அவள் விழித்துக்கொண்டு புருவை அன்புடன் வரவேற்றுபசரித்து அதன் இறகினடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கடிதத்தை யெடுத்துப் பிரித்துப் பார்த்தாள்.

அப்போது மணி மூன்று அடிக்கப் பத்து நிமிஷமிருந்தது. அவள் அக்கடிதத்திலுள்ள விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொண்ட பின்னர் அப் பறவைக்கு ஆகாரம் முதலியவற்றை அளித்து அதை வெளியே பறக்க விட்டுவிட்டாள். உடனே கமலவதி மேல்மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து தன் தாயும் தந்தையும் படுத்திருந்த அறையின் கதவை மெதுவாகத் தட்டினாள். முருகேசனும் தன் உடையை அணிந்து கொண்டு கதவைத் திறந்து தன் குமாரியை உள்ளே அழைத்துக் கொண்டான். அவளும் தான் புருவினிடமிருந்து பெற்ற கடிதத்தை அவனுக்குக் காண்பித்தாள்.

அவன் அதைப் படித்து விஷயத்தை உணர்ந்த பின்னர் அக் கடிதத்தைக் கிழித்து அதற்கு நெருப்பிட்டான்.

பிறகு அவன் தன் குமாரியிடம், 'கமலவதி! உன் சகோதரிகளும் நமது வேலைக்காரர்களும் இந்திராபாய் இங்கு வரப்போவதன் சம்பந்தமாய்ப் பின்னால் என்ன சொல்ல வேண்டுமென்பதை அவர்களுக்குச் சொல்லித் தர இன்னும் சாவகாசமிருக்கிறது. அவள் இங்குவந்து சேர இன்னும் சொற்ப நேரமாகும். அந்தப் புறா தன்னுடைய வேலையை நன்றாகச் செய்து முடித்திருக்கிறது. ஏனெனின் நமக்குக் கிடைத்த கடிதத்தில் இரண்டு இடங்களில் மையினால் கோடு இழுக்கப்பட்டிருந்தது. இப்போது நீ போய்ப் படுத்துக் கொள். ஆனால் காலையில் சீக்கிரம் எழுந்துவிடு. நாம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிடலாம்' என்று தெரிவித்தான். அதற்கு அவள், 'ஐயா, இப்போதே நீங்கள் செய்து வைக்க வேண்டிய வேலைகள் சில இருப்பதாக அவள் எழுதியிருக்கிறாளே. அதை நீங்கள் கவனிக்கவில்லையா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஆஹா! அதையெல்லாம் நான் கவனித்தேன். அவள் கூறியிருக்கும் ஏற்பாடுகளையெல்லாம் நான் செய்துவைத்து விடுகிறேன். நீ போய்ப் படுத்துக் கொள்' என்று கூறினான்.

அவளும் தன் தந்தையின் கட்டளையின்படியே அவ்வறையைவிட்டு மாடிக்குச் சென்றாள். உடனே முருகேசன் தன் மனைவியிடம் தான் இன்னும் சொற்ப நேரத்துக்குள் வருவதாகச் சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டான். அவன் அத் தெருவின் வழியே சிறிது தூரம் நடந்து சென்றதும் ஒரு வீட்டின் வாயிற்படியில் அது ஒரு டாக்டர் வீடு என்று எழுதப்பட்டிருந்ததால் அங்குச் சென்று அவ்வீட்டுக் கதவைத் தட்டினான். உடனே ஒரு ஆள் கதவைத் திறந்து

கொண்டு வெளியே வந்து, 'ஐயா! முருகேசா! என்ன விசேஷம்? உங்கள் ஓட்டலுக்கு அவசரமாக வரவேண்டுமோ?' என்று கேட்டான். அதற்கு முருகேசன், 'ஆம் நேற்று மாலை எங்கள் விடுதிக்கு வந்த ஒரு மாது ஒருவிதமான வலிப் பிணுல் அவஸ்தைப்படுகிறுள். இப்போது கொஞ்சம் சுமாராக இருக்கிறது. என் பெண்கள்தான் அவளுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனித்து வருகின்றனர். இப்போது ஏதேனும் மருந்து கொடுத்தால் போதும். இந்நேரத்தில் உங்களுக்குத் தொந்தரை கொடுத்ததற்காக வருந்துகிறேன்'' என்று கூறினன்.

அப்போது அந்த ஆள், 'அப்படி யொன்றுமில்லை. இதெல்லாம் வியாபாரம்தானே. எனது எஜமானர் டாக்டர் ராஜபூஷணம் வரவேண்டிய அவ்வளவு நோயாக இல்லாவிட் டால் நானே ஏதேனும் தக்க மருந்து தருகிறேன்'' என்று கூறி முருகேசனை உள்ளே அழைத்துச் சென்றுன். முரு கேசனும் அப்போது டாக்டர் வேண்டிய அவசியமில்லை யென்றும், ஏதேனும் மருந்து கொடுத்தால் போதுமென்றும் கேட்டான். அதற்கு குமாஸ்தாவும் வியாதியின் விவரத் தைக் கேட்டறிந்து அதற்கென ஏதோ ஒரு மருந்தை புட்டி யில் ஊற்றி அந்தப் புட்டியின்மீது யாருடைய பெயரை எழுதுவது என்று கேட்டான். அதற்கு முருகேசன், 'சந்திராபாய்' என்னும் பெயரை எழுதும்படி சொல்ல அவ னும் அவ்வாறே எழுதிக் கொடுத்தான். முருகேசன் டாக்ட ருடைய குமாஸ்தாவுக்கு வந்தனம் செலுத்திவிட்டு மருந்து டன் தன் வீட்டுக்குச் சென்று தன் அறைக்குள் போய்ப் பழையபடி படுத்துக் கொண்டான்.

## 19-வது அத்தியாயம்

—:o:—

### இந்திராபாயின் பிரயாணம்

நாம் இப்போது தன் மாளிகையினின்றும் திருட்டுத்தனமாய் இரங்கித் தன் குதிரைமீது ஏறிக்கொண்டு வாயுவேக மனோவேகமாகப் பறந்து சென்ற இந்திராபாய் அந்த இரவில் செய்த பிரயாணத்தின் விவரத்தைக் கவனிப்போம். அவள் ரஸ்தாவை யெல்லாம் கடந்து இரத்தினபுரி நகரிலும் புகுந்து அதன் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் சென்றாள். தான் செற்ப நேரத்துக்குள் இவ்வளவுதூரம் வந்துவிட்டதைப்பற்றி அவள் அளவிலா மகிழ்ச்சியடைந்தாள். அவளது அக் குதிரையும் அவள் படும் சங்கடத்தை யுணர்ந்து அவள் பிறர் கையில் அகப்படாதபடி ஓடவேண்டுமென்னும் எண்ணத்துடன் ஓடுவதுபோலச் சற்றும் சிரமத்தைப் பாராமலும், சிறிதும் நிற்காமலும் ஒரே வேகமாக ஓடியது. அன்றிரவு அங்குக் குற்றம் புரிந்துவிட்டு மறுநாள் காலைக்குள் சுமார் எண்பது மைலுக்கு அப்பாலுள்ள வேறோர் ஊரில் இருக்க ஏற்பாடு செய்திருப்பதுடன் முன்னாள் இரவு முழுதும் அந்த வேறு ஊரிலேயே இருந்ததாக ருஜுப்படுத்திவிட்டுத் தான் ஒன்றுமறியாதவள்போல் தப்பித்துக்கொள்ள வழிதேடிவிட்டதாலும், அந்த வழியினால் அவள் தாங்களே மிகச் சாமர்த்தியவான்களென்று நினைத்துக்கொண்டிருக்கும் வக்கீல்கள் இருவரையும் ஏமாற்றிவிட்டதாலும் உளம் பூரித்தாள். அவள் இரத்தினபுரியை யெல்லாம் கடந்து சென்றுகொண்டிருந்தபோது விடியற்காலை மணி மூன்று இருக்கும். நகரம் முழுதும் சிறிதும் சந்தடியின்றி ஜில்லென்று இருந்தது.

அப்போது அவள் இனி தான் எத்தகைய ஆபத்திலும் அகப்பட்டுக்கொள்ளவில்லை யென்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டவளேபோல் சந்தோஷத்துடன் இருந்தாள். அவளுடைய குதிரைக்கு அடிக்கடி காலால் விலாப்புறத்தில் உதைத்து ஓட்டவேண்டிய அவசியமே இருக்கவில்லை. அவள் ஒரு முறை தன் கரத்தால் அன்புடன் தட்டிக்கொடுத்தாலாவது அல்லது மிக அவசரமாகப் போகவேண்டுமே யென்று வாயால் சொன்னாலாவது போதும்-குதிரை அதை உணர்ந்துகொண்டு வெகு வேகமாய் ஓடும். சாதாரணமாகவே இந்திராபாய் புன்சிரிப்புடனும் சந்தோஷத்துடனும் குஷாலாகவும் இருப்பது வழக்கம். இப்போதோ அவள் அளவிலாத ஆனந்தமடைந்திருந்ததால் எல்லையற்ற களிப்புடன் இருந்தாள். தான் அந்தச் சமர்த்தர்களான வக்கீல்களை ஏமாற்றிவிட்டதை நினைத்தபோதெல்லாம் அவளுக்கும் தெரியாமலேயே ஒருவகையான சிரிப்புக் குறி அவளது முகத்தில் தோன்றுவதுண்டு.

வேலனுடைய இருப்பிடம் சமீபித்துவிட்டது. அக்கம் பக்கத்தி லுள்ளவர்கள் விழித்துக்கொள்ளாம லிருக்கும் பொருட்டு அவள் தன் குதிரையைச் சிறிது மெதுவாக நடத்தினாள். ஆயினும் தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. எங்கும் நிசப்தமாகவே இருந்தது. அப்போது அவள் தன் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி நான்கு என்று தெரிந்தது. இவ்வளவு சீக்கிரத்தில் அவ்வளவு தூரத்தையும் கடந்துவந்துவிட்டதற்காகச் சந்தோஷப்பட்டாள். அவள் குதிரைமீதிருந்து கீழே குதிக்க அதே சமயத்தில் வேலன் வீட்டுக் குதிரை லாயத்தின் கதவும் திறக்கப்பட்டது. வேலன் தயாராக மற்றொரு குதிரையை நிறுத்தியிருந்தான். அதுவும் எல்லா விதத்திலும் இந்திராபாயின் குதிரைக்கு ஒப்பாகவே இருந்

தது. அவள் இன்னும் கடக்கவேண்டிய தூரத்தை எளிதில் கடந்து செல்லக்கூடியதாகவே இருந்தது. இந்திரபாயும் வேலனும் ஏதோ இரண்டொரு வார்த்தைகளைப் பேசி முடித்ததும் வேலன் இந்திராபாயின் குதிரையைத் தன் வீட்டு லாயத்தில் கட்டிவிட்டு உள்ளே சென்று ஒரு பாத்திரத்தில் மதுபானம் கொண்டுவந்து கொடுத்தான். அவளும் அதைக் குடித்துவிட்டு வேலன் தயாராக வைத்திருந்த குதிரையின் மீது ஏறிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு அகன்றாள்.

புறப்பட்டதும், 'நான் அடுத்தபடியாகப் போய்ச் சேர வேண்டிய இடம் இன்னும் இருபத்தொன்பது மைல்களுக்கிருக்கின்றன. அந்தத் தூரத்தை இரண்டுமணி நேரத்தில் கடந்துவிடவேண்டும். இக் குதிரையும் நன்றாக ஓடக்கூடியதாகத்தான் இருக்கிறது. ஆதலால் குறித்த நேரத்தில் அங்கு போய்ச் சேர்ந்துவிடலாமென்னும் தைரிய மிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டாள். அப்போது மணி ஐந்துக்கு மேல் ஆகிவிட்டதால் சூரியோதயமாகும் சமயமாயிருக்கவே நாற்புறங்களிலும் வானம் அழகாக இருந்தது. அப்போது தான் பறவை முதலியன தூக்கத்தினின்றும் எழுந்துகொண்டிருந்தன. இதனையெல்லாம் இந்திராபாயின் உற்சாகம் அதிகரிக்கலாயிற்று. குதிரை அதி வேகமாய் ஓடியதால் அதன் வாயினின்றும் நுரை தோன்றவே அதனிடம் அபிமானம் கொண்ட அவள் இடையிடையே குளம் குட்டை இருக்குமிடங்களில் குதிரையை நிறுத்திக் கீழே இறங்கித் தண்ணீரால் குதிரையின் முகத்தைத் துடைத்து அதைத் தட்டிக் கொடுத்துத் தேற்றிய பின்னரே மேலும் செலுத்துவாள்.

சரியாக ஆறுமணிக்கெல்லாம் அவள் சேர்வாராயன் குன்றின்மீது தனியாகக் கட்டப்பட்ட தொம்மன் தம்பதிகள் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தாள். அங்கும் தொம்மன் முன்

ணரே அவள் அனுப்பியிருந்த செய்தியில் அக்கறைவைத்து அவளது பிரயாணத்துக்காகவென்று ஒரு குதிரையைத் தயாராக வைத்திருந்தான். அவர்களிருவரும் இரண்டொரு நிமிஷம் ஏதோ பேசியபின்னர் பழையபடி ஒரு டம்ளர் மதுபானத்தை அருந்திவிட்டுத் தொம்மன் தயாராக வைத்திருந்த குதிரையின்மீது ஏறிக்கொண்டாள். அவள் கடைசியாகப் போய்ச் சேரவேண்டிய இடம் இன்னும் பத்தொன்பது மைல்கள் இருந்தன. அதை எப்படியாவது ஏழேகால் மணிக்குள் கடந்து சென்று துறைமுகப் பட்டணமாகிய நாகபுரிக்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்று முடிவுசெய்தாள்.

அவள் சேர்வாயன் குன்றுக்கடுத்த கந்தபுரியை அணுகியதும் ஜனங்களெல்லாம் அவளைப் பார்த்துவிடக் கூடாதென்னும் எண்ணத்துடன் அவள் நகரில் புகாமல் வேறு குறுக்குவழியே குதிரையைச் செலுத்தலானாள். அவளுக்கு அப் பிரதேசத்திலுள்ள சந்து பொந்துகளும் குறுக்கு வழிகளும் நன்றாகத் தெரியும். ஆகவே அவள் எப்படி எப்படியோசென்று மீண்டும் வெகு தூரத்துக்கு அப்பால் முக்கிய ரஸ்தாவை அடைந்தாள். தொம்மன் அவளுக்குக் கொடுத்த குதிரையும் இளப்பமானதல்ல. வேலன் கொடுத்த குதிரையைப்போலவே வேகமாக ஓடக்கூடியதாயும் பார்வைக்கு அழகானதாயும் இருந்தது. அவள் கடைசியாகப் போய்ச் சேரவேண்டிய இடம் சமீபித்துவிட்டபடியால் தான் தனது முயற்சியில் வெற்றிபெற்று விட்டதாகவே நினைத்து ஒவ்வொரு மைலையும் சந்தோஷத்துடனேயே கழித்துவந்தாள். துறைமுக நகரின் உயரமான கோபுரமும் அவளது கண்ணுக்குத் தென்பட்டது. அப்போது அவளடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

இரண்டொரு நிமிஷத்துக்குள் துறைமுக நகரான நாக

புரியை அடைந்தாள். கடிகாரத்தைப் பார்த்ததில் ஏழு அடித்துப் பத்து நிமிஷங்கள் ஆகிருந்ததைக் கண்டாள். இரத்தினபுரியின் வடகோடிக் கப்பாலிருந்து இந்த நகரத்துக்கு ஐந்தரை மணி நேரத்தில் வந்து சேர்ந்திருக்கிறுள். ஆ! என்னே அவளது ஆற்றல்! சாந்தமும் சமாதானமும் உருக் கொண்டதுபோன்ற பெண்களில் ஒருத்தியான இந்திராபாய் கேவலம் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டது பலமாகக் கண்டிக்கத்தக்கதேயாயினும் இப்போது அவள் காட்டிய வீரத்தையும், தைரியத்தையும், மனே உறுதியையும் கண்டு எவரும் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. பெண்பேதை என்று ஆடவர்களால் அவமதிக்கப்படுகின்ற ஒரு மாது பல ஆடவர்களுக்கு இல்லாத விதமான தைரியத்துடன் தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டதைக் கண்டு உலகம் பிரமிக்குமென்பதில் ஐயமில்லை. மாதர்கள் பொதுஜன நன்மைக்காக எத்தகைய தியாகத்தையும் வீரத்தையும் காட்டிய போதிலும் அதைக் கண்டு களிக்கலாம். ஆனுல் ஜன சமூகத்துக்கே தொல்லையைத் தரக்கூடிய இழிதொழில்களில் அவர்கள் பிரவேசிப்பதைப் பாராட்ட முடியாது.

சரியாக ஏழேகால் மணிக்கு இந்திராபாய், நாகபுரியின் முக்கிய தெருக்களில் ஒன்றில் இருந்த முருகேசனுடைய ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்ததும் அவனுடைய குமாரிகளான கமலவதி முதலியோர் அவளை மேல்மாடிக்கு அழைத்துச் சென்று ஒரு படுக்கையறையில் விட்டார்கள். அவள் நடந்துகொண்ட சாமர்த்தியத்தைக் கண்டு அச் சகோதரிகள் மூவரும் அவளை அன்புடன் தழுவிக்கொண்டனர். பிறகு அவள் அணிந்திருந்த ஆண்வேடத்தைக் களைவதில் அவளுக்கு அவர்கள் மூவரும் உதவி செய்தனர். இந்திராபாய் பெண் உடைகளை அணிந்தபின்னர் அயர்ச்சியுடன் படுக்கை

யின்மீது படுத்தாள். கமலவதி அருகில் உட்கார்ந்துகொண்டு இந்திராபாயின் கடிதம் புறாவின்மூலம் கிடைத்ததும் தன் தந்தை எத்தகைய ஏற்பாடுகளைச் செய்து முடித்தார் என்பதை விவரமாகத் தெரிவித்தாள். இதற்குள் அவளுடைய சகோதரி ஒருத்தி கீழே சென்று இந்திராபாய்க்குக் காலை ஆகாரம் கொண்டுவரச் சென்றாள். மற்றொருத்தி, இந்திராபாய்க்காக வாங்கி வைத்திருந்த மருந்து பாட்டிலைக் கொண்டுவந்து மருந்தை மறைவாக ஊற்றிவிட்டு அந்தப் பாட்டிலை இந்திராபாய் படுத்திருந்த படுக்கையினருகில் அலட்சியமாகக் கிடப்பதுபோல் போட்டுவைத்தாள். கமலவதியும் இந்திராபாயைப் போலவே உயரத்திலும் பருமனிலும் இருந்தபடியால் அவளுடைய உடைகள் இந்திராபாய்க்குச் சரியாகவே இருந்தன.

இந்திராபாயும் தனக்குக் கொடுக்கப்பட்ட காலை ஆகாரத்தை மனமார அருந்தினாள். இவ்வேலைகளெல்லாம் முடிவதற்குள் மணியும் எட்டு அடித்தது. டாக்டர் சம்பந்தப்பட்ட காரியங்களெல்லாம் சரிவர முடிக்துவிட வேண்டுமாகையால் உடனே முருகேசன் டாக்டர் ராஜபூஷணத்தை அழைத்துவரச் சென்றான். அவன் சென்ற சிறிது நேரத்துக்குள் முருகேசனுடைய மனைவி டாக்டர் ராஜபூஷணத்தை இந்திராபாய் படுத்திருந்த அறைக்குள் அழைத்துவந்தாள். டாக்டர் நடுத்தர வயதானவர். முகம் பார்க்கும்போதே அவர் கருணையும் தாராள புத்தியும் உடையவர் என்று சொல்லிவிடலாம். இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் மகிழாது என்பதை நன்கு அறிந்துகொண்டவர். சகஜமாகவே டாக்டர்கள் நோயாளிகளிடமிருந்து அதிக பணம் பறிக்கும் பொருட்டு மிக்க இனிமையாகப் பேசி அப்போதே நோய் தீர்ந்துவிடக்கூடிய மருந்துகளைக் கொடுப்பது

போல் பாவனை செய்வது வழக்கம். அத்தகைய தந்திரங்களிலெல்லாம் டாக்டர் ராஜபூஷணம் கைதேர்ந்தவர். இந்திரா பாயின் படுக்கைக்கருகிலிருந்த மேஜையின் மீது நிறைய பணத்தையுடைய பணப்பை யொன்று கிடந்ததைக் கண்ட ராஜபூஷணம், தனக்குத் தாராளமாகப் பணத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு நோயாளி அகப்பட்டது பற்றிச் சந்தோஷமடைந்தார்.

டாக்டரைக் கண்டதும் இந்திராபாயும் மிக்க சோர்வடைந்தவள் போலப் பாசாங்கு செய்தாள். அவள் காலை ஆகாரம் அருந்தியதை டாக்டர் கண்டிருக்கவில்லை யாதலால் அவளது நாடியைப் பிடித்துப் பார்த்ததில் அவள் ஏதோ நோயுடன் இருக்கவேண்டுமென்று தான் தீர்மானித்தார். அவள் விடியற்காலை மூன்று மணிக்குப் புறப்பட்டு ஒரே மூச்சில் அவ்வளவு தூரம் குதிரை சவாரிசெய்ததாலும், அவ்வளவு களைப்பில் காலை ஆகாரத்தை அதிகமாக அருந்திவிட்டதாலும் அவள் உண்மையிலேயே தலைவலியினாலும், மெய் நடுக்கத்தாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆகவே டாக்டர் அவளது நாடியைப் பிடித்துப் பார்த்ததும், 'கொஞ்சம் ஜுரம் அடிப்பதுபோலத் தெரிகிறது. இப்போது எப்படி இருக்கிறது, அம்மா?' என்று கேட்டார். அவர் அவ்வாறு கேட்டதைக் கண்ட இந்திராபாய் டாக்டரின் அறியாமையைக் கண்டு கொல்லென்று சிரிக்க எண்ணினாள். ஆயினும் அந்த டாக்டரால் தனக்கு இன்னும் ஆகவேண்டிய காரியத்தை உத்தேசித்துச் சிரிக்காமல் இருந்ததுடன் அடக்கத்துடனும் மரியாதையுடனும், 'ஐயா, இப்போது சிறிது சுமாராகத்தான் இருக்கிறது. ஆயினும் நேற்றிரவு தான் அதிக கஷ்டப்பட்டேன். இப்போதுகூட வலிப்பு வந்துவிடுமோ என்று பயந்தேன். ஆனால் தெய்வாதீனமாக இப்போது ஒன்றுமில்லை' என்று விடையளித்தாள்.

அப்போது டாக்டர், 'ஓ! நீ இன்னும் ஒரு பாட்டில் மருந்தை உட்கொள்ளவேண்டும். உனக்குப் பசியில்லையல்லவா?' என்று கேட்டார். சுமார் அரை மணி நேரத்துக்கு முன்புதான் நன்றாகக் காலை ஆகாரம் அருந்திய அவள் உடனே, 'எனக்குப் பசியே கிடையாது,' என்று உண்மையைப் பேசுபவள்போல் கூறினாள். அதற்கு டாக்டர், 'இல்லை, இல்லை. அப்படி ஆகாரமில்லாமல் இருக்கக்கூடாது. சிறிது ரொட்டித் துண்டையாவது காப்பியில் தோய்த்துச் சாப்பிடவும், இல்லாவிட்டால் களைப்பாக இருக்கும்,' என்று சொன்னார். அப்போது இந்திராபாய், 'ஐயா, என்னைத் தொந்தரை செய்யவேண்டாம். வெறும் காபிகூட இப்போது எனக்குப் பிடிக்காது. எதை வாயில்போட்டாலும் உடனே வாந்திவந்துவிடும்போலிருக்கிறது,' என்று கூறியதும் அருகிலிருந்த கமலவதிக்கு அடங்காச் சிரிப்பு வந்துவிட்டது. அவள் சிரிப்பது டாக்டருக்குத் தெரியக்கூடாதென்பதற்காக அவள் தனது முகத்தை ஜன்னலின் பக்கமாகத் திருப்பிக்கொண்டாள்.

பின்னர் டாக்டர், 'அம்மா! நீ களைப்புடன் இருப்பதால் ஏதேனும் உபாயமான ஆகாரத்தையாவது உட்கொள்ளத்தான் வேண்டும். எப்போது முதல் உனக்கு இம்மாதிரி இருக்கிறது?' என்று இந்திராபாயைப் பார்த்துக் கேட்டார். உடனே அங்கிருந்த முருகேசனுடைய மனைவி, 'ஐயா, இந்த மாது நேற்று மாலை ஏழு மணிக்கு இங்கே வந்தாள். அவள் வந்து சிறிது நேரத்துக்கெல்லாம் ஏதோ மயக்கமாய் இருப்பதாகத் தெரிவித்தாள். அது முதல் இப்படியே இருக்கிறது' என்று தெரிவித்தாள். கமலவதியும் தன் தாயார் கூறியது சரிதான் என்று டாக்டரிடம் சொன்னாள். அப்போது டாக்டர், 'அப்படியானால் விடியற் காலை மூன்று

மணிக்குத் தான் உனக்கு நோய் அதிகரித்திருக்கவேண்டு மென்று நினைக்கிறேன். ஏனெனின் அப்போதுதான் முரு கேசம் எனது வீட்டிற்கு வந்து என் குமாஸ்தாவினிட மிருந்து மருந்து வாங்கிவந்தார்,' என்று கேட்க இந்திராபாய், 'ஐயா! நான் மணி பார்த்துவைக்கவில்லை. ஆயினும் நேற்று மாலை ஏழு மணிக்கு மயக்கமும் வலியும் வந்தது முதல் எனக் கொன்றுமே தெரியாது. எல்லாம் இந்த வீட்டாருக்குத் தான் தெரியும். அவர்கள் தான் அப்போது முதல் என் னைக் கவனித்து வருகின்றனர்,' என்று தெரிவித்தாள்.

பிறகு டாக்டர் மற்றும் சில அவசியமான கேள்விகளைக் கேட்ட பின்னர், தான் வீட்டுக்குச் சென்றதும் மற்றொரு புட்டி மருந்தை அனுப்புவதாகவும், தன் வரவு அவசிய மென்று தோன்றினால் எந்த நிமிஷத்தில் அழைத்தாலும் வரத் தயாராக இருப்பதாகவும் கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார். முருகேசனுடைய மனைவியும் டாக்டருடன் அவ் வறையைவிட்டுச் சென்றாள். அவர்கள் போனதும் இந்திரா பாயும் கமலவதியும் நீண்டநேரமாக அடக்கிக்கொண்டிருந்த சிரிப்பைத் தாராளமாக வெளிப்படுத்தினர். அவர்கள் டாக் டரையும் பக்குவமாக ஏமாற்றிவிட்டதற்காக சந்தோஷப்பட் டனர்.

பிறகு கமலவதி இந்திராபாயைப் பார்த்து. 'உண்மையி லேயே உன் உடம்பு எப்படி இருக்கிறது?' என்று கேட் டாள். அதற்கு அவள், 'சிறிது களைப்பாக இருப்பது தவிர வேறொன்றுமில்லை. இப்போது நான் எப்போதையும் விடச் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். எப்போதும் நான் எதற்காகவும் கவலைப்படுவது வழக்கமில்லை. கவலை என்னும் பதத்தையே என் காதில் போடக்கூடாது. சிற்சில வேளை களில் அதிக சந்தோஷப்பட்டாலும் படுவேனே தவிர எப்

போதும் துக்கப்படமாட்டேன். நான் இன்று இவ்வாறு இவ்வளவு தந்திர சாமர்த்தியங்களை யெல்லாம் செய்யவேண்டிய அவசியமென்ன என்பது பற்றிச் சொல்கிறேன் கேள்,' என்று கூறிவிட்டுத் தான் முன்நாள் இரவு கொள்ளையடிக்க முயற்சித்ததையும், இரு வக்கீல்களின் கையில் கைதியாய்ச் சிக்கிக்கொண்டதையும், பிறகு அவர்களை ஏமாற்றிவிட்டு வந்ததையும் விவரமாகக் கூறினாள். இரு வக்கீல்களையும் ஏமாற்றிய விதத்தைப் பற்றிக் கூறியபோது கமலவதி தன் சினேகிதையின் சாமர்த்தியத்தையும், வக்கீல்களின் ஏமாற்றத்தையும் கண்டு சிரித்தாள்.

மேலும் இந்திராபாய் கூறியதாவது:—அந்த இரு வக்கீல்களும் எனக்கு விரோதமாக இருப்பதாக நான் சொல்லவில்லை. ஆயினும் அவர்கள் வக்கீல்களாதலால் குற்றம் செய்தவளாகிய நான் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டுமென்பதும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் அலட்சியம் செய்யப்படலாகாதென்பதும் அவர்களுடைய அபிப்பிராயமாகும். ஆகவே அவர்கள் என்னை விடமாட்டார்கள். எப்படியாவது என்னைக் கைதுசெய்ய ஏற்பாடு செய்வார்கள். அவர்களே என்னைத் தேடிக்கொண்டு வந்தாலும் வருவார்கள். நான் அந்நிய நாட்டுக்குப் போய்விடுவேன் என்னும் எண்ணத்துடன் இந்த நகரத்துக்கே இப்போதே வரவுங்கூடும். சரி, அவர்கள் வரட்டும். நானும் அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். ஏனெனின், என்ன ஆகுமோ என்று பயப்பட்டுக் கொண்டிருப்பதைவிட எதையும் இப்போதே தீர்த்துவிடுவது நலம். என்னைப்பற்றிய சமாசாரம் இங்கேயே தீராமல் நான் இரத்தினபுரிக்குச் சென்றுவிட்டால் உங்களையெல்லாம் சாட்சியாக நான் அவ்விடத்துக்கு வரவழைக்க நேரிடும். முதல்வண்டி எத்தனை மணிக்கு வருகிறது?' என்று கேட்டாள்.

அதற்குக் கமலவதி, 'முதல்வண்டி சுமார் பதினொரு மணிக்கு வருகிறது' என்று பதில் கூறவும் இந்திராபாய், 'அப்படியானால் நான் சற்றுநேரம் தூங்குகிறேன். இப்போது மணி எட்டரைதான்-இன்னும் சாவகாசமிருக்கிறதல்லவா? நேற்று இரவு முழுவதும் தூங்கவே இல்லை. தூக்க மயக்கம் அதிகமாய் இருக்கிறது' என்று தெரிவித்தாள். அதன்மீது கமலவதி, 'சரி, அப்படியானால் தூங்கு-நான் வெளியே போகிறேன். பதினொருமணிக்கு ஏதேனும் உபாயமாக ஆகாரம் கொண்டுவரட்டுமா?' என்று புன்சிரிப்புடன் கேட்டாள். அதற்கு இந்திராபாய் சிரிப்புடன், 'உபாயமான ஆகாரமா? நல்ல புஷ்டியான ஆகாரமே கொண்டுவா' என்று சொன்னதும் கமலவதி கதவைச் சாத்திக்கொண்டு போனாள். அவள் சென்றதும் இந்திராபாய் நிம்மதியாகத் தூங்கினாள். அவள் தூங்கியதைப் பார்த்தால் சற்றுநேரத்துக்குள் அவள் அதிகாரிகளிடம் போய்ப் பதில் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுமே என்னும் கவலை சிறிதும் இல்லாதவளைப்போலக் காணப்பட்டாள்.

## 20-வது அத்தியாயம்

### பிரயாணத்தின் பலன்

இந்திராபாய் நாகபுரியில் முருகேசன் ஓட்டலுக்குப்போய்ச் சேர்ந்த அன்று பகல் சுமார் ஒரு மணிக்கு ஒரு கனவான் அந்நகரத்தைச் சேர்ந்த போலீஸ் சேவகனுடன் முருகேசனுடைய ஓட்டலில் நுழைந்து அதன் முதலாளியான முருகேசனுடன் சிறிதுநேரம் பிரத்யேகமாகப் பேசவேண்டுமென்று கேட்க முருகேசனும் அவ்வாறே

அனுமதித்து அவர்களை ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்றான். ஆனால் அங்கே முருகேசனுடைய மனைவியும் மூன்று குமாரிகளும் இருந்தார்கள். உடனே முருகேசன், 'இவர்கள் என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இங்கு இருக்கலாமா, கூடாதா?' என்று கேட்க இரத்தின புரியிலிருந்து வந்த சிறிது வயதானவரான வக்கீலாகிய மன மோகனர், 'அப்படியானால் பாதகமில்லை. அவர்கள் எதிரி லேயே நான் உமக்குக் கேட்கவேண்டிய கேள்வியைக் கேட் கிறேன். ஆண்வேடம் தாங்கிய பெண் யாராவது இங்கு வந்து தங்கியிருக்கிறாளா?' என்று கேட்டார்.

உடனே முருகேசனுடைய மனைவியும், குமாரி கமல வதியும் உரத்த குரலில் மனமோகனருக்குக் கேட்கும்படி, 'இதென்ன ஆச்சரியம்! அப்படிப்பட்ட பெண் இங்கு எவ ரும் வரவில்லையே' என்று ஒன்றும் அறியாதவர்களைப்போல் கூறினார்கள். அப்போது மனமோகனர் போலீஸ்காரனைப் பார்த்து, 'நான் தேடும் அப் பெண் இங்கேயும் இல்லைபோ லத் தெரிகிறது. நாம் இதுவரை எழெட்டு ஓட்டல்களில் தேடிப்பார்த்தும் அவள் அகப்படவில்லை. ஆனால் நான் இந்த நகரிலுள்ள ஒவ்வொரு ஓட்டலிலும் விடாமல் விசாரித் துவிடவேண்டும்-வா-போகலாம்,' என்று கூறினார். அதற் குப் போலீஸ்காரன், 'அவள் இந்த நகரிலேயே இருக்கிறாள் என்று நீங்கள் உறுதியாக நினைப்பதன் காரணமென்ன?' என்று கேட்கவும் இரத்தினபுரி வக்கீல், 'அவள் அந்நிய நாடு களுக்குச் சென்றுவிடும்பொருட்டு துறைமுகப் பட்டணமா கிய இங்கு வருவாள் என்பது தவிர வேறு எக்காரணமு மில்லை. எப்படியாயினும் ஸ்டேஷனில் ஒரு ஆளை வைத் திருக்கிறோமே. அவன் ஒவ்வொரு வண்டியிலிருந்து இறங் கும் ஜனங்களையும் கவனிப்பானல்லவா?' என்றார்.

அந்தச் சமயத்தில் டாக்டர் ராஜபூஷணத்தின் சேவகன் ஒருவன், தன் கைக்கூடை நிறைய பாட்டில்களுடன் அங்கு வந்து ஒரு பாட்டிலை யெடுத்து முருகேசனுடைய மேஜையின்மீது வைத்து, 'ஸ்ரீமதி-சந்திராபாய்' என்று கூவிவிட்டு மற்றும் தன்னிடமுள்ள பாட்டில்களை மற்ற இடங்களில் கொடுப்பதற்காகப் போய்விட்டான். உடனே மனமோகனர், 'சந்திராபாயா! ஆ, கடவுளே. நான் தேடும் பேர்வழியும் அவள்தான்' என்று அலறினர். அப்போது முருகேசன், 'ஆம், ஐயா, அந்தப் பெயருடன் ஒருமாது என் ஒட்டலில் தங்கியிருப்பது வாஸ்தவமே' என்று கூறியதும் மனமோகனர் பரபரப்புடன், 'சரி, சரி. அவளுடைய அறையை எங்களுக்குக் காண்பியுங்கள். போலீஸ்காரா! பறவை கடைசியாக அகப்பட்டுவிட்டது. வா, அவள் இருக்கும் அறைக்குப் போவோம்' என்று கூறிக்கொண்டே மாடிமீது ஏறப்போனர். அப்போது முருகேசன், 'ஐயா, எங்கே விரைவாகப் போகிறீர்கள்? அதுவும் போலீஸ்காரனையும் அழைத்துச் செல்கிறீர்களே. அவள் மிக்க ஜுரத்துடன் படுக்கையில் படுத்திருக்கிருள். அவள் ஒரு கண்ணியமான மாதே என்றுதான் நான் நினைக்கிறேன். ஏதாவது விசேஷமிருக்கிறதா?' என்று கேட்டான்.

அதற்கு மனமோகனர், 'அவளா கண்ணியம் வாய்ந்த மாது? அவள் ஒரு பெரிய கொள்ளைக்காரியாயிற்றே!' என்று சொன்னதும் முருகேசனுடைய மனைவி அதிக திகிலடைந்தவளேபோல், 'ஐயோ கடவுளே! அவள் திருடியா? பெண்களே நமது பாத்திரங்களெல்லாம் சரியாய் இருக்கின்றதா என்று எண்ணிப் பாருங்கள்,' என்று கூறினள். அவளுடைய குமாரி கமலவதி உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை நடுங்குபவள்போல் பாசாங்கு செய்து, 'ஐயையோ! இரவு முழு

தும் ஒரு திருடி எங்கள் கட்டடத்தில் இருந்தாளே. தெய்வா தீனமாய் எங்களை ஒன்றும் செய்பவில்லை. அப்படிப்பட்ட வளைச் சேர்ப்பது ஆபத்துதான்' என்றாள். மறுபடியும் முரு கேசனுடைய மனைவி, அச்சத்துடன் கூறுவதேபோல்,'அவள் உண்மையிலேயே கொள்ளைக்காரியானால் அவள் சீக்கிரத்தில் வெளியே போய்விடும்படி செய்வது நலமே. உடனே இக்கனவானையும் போலீஸ்காரனையும் அழைத்துச் சென்று அவள் படுத்திருக்கும் அறையைக் காண்பித்துவிடுங்கள். அவள் எங்களுக்கும் டாக்டருக்கும் சேரவேண்டிய பணத் தைக் கொடுத்துவிடுவாள் என்று நம்புகிறேன்' என்று தன் குமாரிகளைப் பார்த்துச் சொன்னாள்.

இம்மாதர்கள் இவ்வாறு பேசியதைப் பிரமையுடன் கேட்டுக்கொண்டிருந்த மனமோகனர் திடீரென்று, 'இதில் ஏதோ தவறு இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். ஏனெ னின், உங்களில் ஒருத்தி அவள் நேற்று இரவு முழுதும் இங்கு தங்கி இருந்ததாகக் கூறினாளே. நான் சொல்லும் மாது இன்று விடியற்காலை தான் இங்கு வந்திருக்க முடியும். அவள் ரயில் மார்க்கமாக வரவில்லை யென்று விசாரித்துத் தெரிந்துகொண்டுவிட்டோம். நான் சொல்பவள் நேற்று இரவு முழுதும் இங்கு இருந்திருக்க முடியாது' என்றதும் முருகேசன், 'ஆம், தவறு ஏதேனும் இருக்கலாம். இப்போது நாம் சொல்லும் ஸ்ரீமதி. சந்திராபாய் என்பவள் நேற்று மாலை ஆறு மணி முதல் இங்கேயே இருக்கிறாள்,' என்றான். அப் போது மனமோகனர், 'அப்படியானால் நான் தேடும் மாது இவளாக இருக்கமுடியாது. எனினும் இருவருடைய பெய ரும் ஒன்றாக இருக்கிறது. அதிருக்கட்டும். இவளுடைய உருவம் எப்படி இருக்கும்? நான் தேடும் சந்திராபாய் சுமார் இருபத்தாறு வயதுடையவளாயும், நடுத்தர உயரமானவளா

யும், பெருத்த கரிய கண்களேயும், நீண்டு சுருண்ட கூந்தலே யும், அழகிய பற்களேயும் உடையவளாயும் பார்வைக்கு அழகானவளாயும் இருப்பாள்,' என்று அவள் தோற்றத்தை வருணித்தார்.

இந்திராபாயின் விவகாரம் நாகபுரியிலேயே முடிந்துவிட வேண்டுமென்று விரும்பிய கமலவதி உடனே, 'எங்கள் மாடி மீது தங்கியிருக்கும் மாதும் இப்போது நீங்கள் சொல்லிய அங்க அடையாளங்களுடனேயே விளங்குகின்ருள்,' என்றதும் மனமோகனர், 'அப்படியானுல் சரி, இம்மாதே நான் தேடும் அவளாக இருக்கலாம். இந்த மாது ஆண் வேடத்துடன் இங்கு வந்தாளோ' என்று வினவினர். அதற்குக் கமலவதி, 'அப்படி யொன்றுமில்லே. நேற்று மாலே பெண் உருவத்துடனேயே வந்தாள். ஆண் வேடத்துடன் வந்திருந்தால் அவளே நாங்கள் சேர்க்கமாட்டோம். இதோ உமது அருகிலிருக்கும் போலீசாரைக் கேட்டுப்பாருங்கள் எங்களுடைய ஓட்டல் எவ்வளவு கௌரவமானதென்பது விளங்கும்,' என்ருள்.

உடனே மனமோகனர், 'அது சரி. நான் இப்போது உங்களேப் பற்றி ஒன்றும் கேவலமாக நினேக்கவுமில்லே, கூறவுமில்லே. இன்னும் ஒரே ஒரு சந்தேகம்தான் நிவர்த்தியாக வேண்டியிருக்கிறது. அவள் இந்த இடத்துக்கு எப்போது வந்தாள்?' என்று கேட்டார். அப்போது முருகேசன், 'அவள் நேற்று மாலே ஆறு மணிக்கு வந்தாள் என்று பல முறை தெரிவிக்கப்பட்டதே. வேண்டுமாயின் இதோ இந்தக் கணக்கைப் பாருங்கள். அவள் நேற்று மாலே வந்ததும் சிற்றுண்டி யருந்தியதைக் கணக்கில் வைத்திருக்கிறேம். மேலும் அவள் நேற்றிரவெல்லாம் ஜுரத்துடன் இருந்தாள். ஜுரம் அதிகமாய்விட்டதால் விடியற்காலம் மூன்று மணிக்கு

டாக்டர் வீட்டுக்குச் சென்று மருந்தும் வாங்கிக்கொண்டுவந்தேன். என் குமாரி கமலவதி தான் இரவெல்லாம் அவள் பக்கத்திலிருந்து அவளுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனித்து வந்தாள்,' என்று விவரமாகக் கூறினான்.

இதையெல்லாம் கேட்டு மனக் குழப்பமடைந்த மன மோகனர், 'நீங்கள் கூறுவதையெல்லாம் பார்த்தால் இங்கு தங்கியிருக்கும் மாது என்னால் தேடப்படும் சந்திராபாய் அல்ல என்று தோன்றுகிறது. ஆயினும் அங்க அடையாளங்களெல்லாம் ஒன்றாகவே இருக்கிற தென்று தெரிவதால் அவளை ஒரு முறை பார்த்துவிட வேண்டுமென்னும் ஆவல் எனக்கு அதிகமாக இருக்கிறது. அவளுக்கு எவ்வகையிலும் அவமானம் ஏற்படாத வகையில் நான் அவளைச் சந்திக்கிறேன்' என்று கூறினர். உடனே கமலவதி, 'அப்படியானால் நான் போய் அவள் உடைகளைச் சரியாக அணிந்திருக்கிறாளா என்று கவனிக்கிறேன்,' என்று சொன்னதும் ஏதோ திடுக்கிடுபவள்போல், 'அவள் கொள்ளைக்காரியாக இருந்தால் நான் என்ன செய்வது?' என்று கேட்டாள். அப்போது அவளது தந்தையாகிய முருகேசன், 'அவள் கொள்ளைக்காரியாயின் விரைவில் அவளை இங்கிருந்து அனுப்பிவிடுவோம். ஆயினும் அவள் உன்னைத் தின்றுவிடமாட்டாள். நீ தைரியமாகப் போய் அவள் உடையணிந்திருக்கிறாளா என்று பார்த்துவிட்டு வா' என்றான்.

பிறகு தான் அவள் தைரியத்தையடைந்தவள் போல், 'சரி, போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று கூறிக் கொண்டே அவ்விடத்தைவிட்டு மாடிக்குச்சென்றதில் இந்திராபாய் அரைமணி நேரத்துக்கு முன்புதான், தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டிருந்தாள். அவள் இரண்டு மூன்றுமணி சாவகாசம் அமைதியாகத் தூங்கியதால் களைப்பாறி உற்சாக

மடைந்தவளாய் இருந்தாள். கமலவதி அவ்வறையில் பிரவே சித்ததும் இந்திராபாய் அவளைப் பார்த்து, 'நீ வந்த வேலை இன்னதென்று எனக்குச் சொல்லவேண்டியதில்லை. உன் முகம் பார்க்கும்போதே தெரிந்துவிட்டது, நான் எதிர்பார்க் கும் நெருக்கடியான வேளை வந்துவிட்டது போலும்,' என் றாள்.

பிறகு கமலவதி கீழே நடந்த விவரங்களையெல்லாம் தெரி வித்துவிட்டு இந்திராபாய் ஜெயிப்பாளோ இல்லையோ என் னும் சந்தேகமுடையவளைப்போல், 'அன்புள்ள சினேகி தையே! நீ நிச்சயமாக ஜெயிப்பாய் என்று தெரிந்தால் பார் இல்லாவிட்டால் அவர்கள் யாருக்கும் தெரியாமல் நான் உன் னைக் கீழே இறக்கிவிட்டுவிடுகிறேன். நீ எங்கேனும் மறைந்து போகலாம்' என்று தெரிவித்தாள். அப்போது இந்திராபாய் கமலவதியின் கையை அன்புடன் பிடித்துக்கொண்டு, 'என் னைப் பார்த்தால் இதற்கெல்லாம் பயப்படுபவள்போலத் தெரி கிறதா? எனக்கு எத்தகைய அச்சமும் இல்லை. நான் எதிர் பார்த்தபடி இவ்விவகாரம் விரைவில் இந்நகரிலேயே முடிந்து போகும் சந்தர்ப்பம் வாய்த்தது பற்றி நான் சந்தோஷப்படு கிறேன். உன் உடைகள் எனக்குச் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்த்துச் சொல்' என்றாள். இந்திராபாய் இவ் வளவு தைரியத்துடன் கூறியதைக் கேட்டு சந்தோஷ மடைந்து கமலவதி, 'என் உடைகள் உனக்குச் சரியாகவே இருக்கின்றன. இவை இரவல் உடைகள் என்று யாருமே கூறமாட்டார்கள்' என்று தெரிவித்தாள்.

இந்திராபாய் உடைகளையும் நகைகளையும் அணிந்ததும் அங்கு எதிரில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தன் உரு வத்தைப் பார்த்துக்கொண்டு சந்தோஷமடைந்தாள். அவள் அப்போது அழகும் கௌரவமும் வாய்ந்த மாதாகத் தோன்

றினள். அவளைக் காணும் எவரும் அவள் நல்ல அந்தஸ்தைச் சேர்ந்தவளே என்று நினைப்பார்களே யொழிய கொள்ளைக்காரி யென்று சொல்லத் துணியமாட்டார்கள். அவளைப் பார்ப்பவர்கள் உடனே அவளிடம் அனுதாபங் காட்டுவார்களே யன்றி அவளை எவ்வித கஷ்டத்திலும் சிக்கவைக்க விரும்பமாட்டார்கள். இந்திராபாய் எல்லாவற்றையும் சரியாக அணிந்துகொண்ட பின்னர், 'கமலவதி! உன்னுடைய அழகிய அறைகளில் ஒன்றைக் காண்பி. நான் அத்தனியறையில் ;ஒரு சோபாவின் மீது தேக அசௌக்கியமுடையவளைப்போல் படுத்துக்கொள்கிறேன். பிறகு நீ மனமோகனரை இங்கே அழைத்துவா' என்றாள். அப்போது கமலவதி, 'அவர் தேடும் சந்திராபாய் நீதானு என்பதில் அவர் இன்னும் சந்தேகமாகவே இருக்கிறாரே, என்ன செய்வது,' என்றாள். அதற்கு இந்திராபாய், 'நீ அவரிடம் நான் இரத்தினபுரிக்குச் சமீபத்தில் தனிமையான ஒரு வெண்மையான கட்டடத்தில் வசிக்கும் சந்திராபாயே என்று அவரிடம் கூறு பிறகு அவர் கட்டாயம் என்னை இந்நகரத் தலைவரிடம் விசாரணைக்கு அழைத்துச் செல்வார் என்று தெரிவித்தாள்.

பிறகு கமலவதி இந்திராபாயை வேறொரு தனியானதும் அழகாக அலங்கரிக்கப் பட்டதுமான அறைக்கு அழைத்துச்சென்று அங்கிருந்த சோபாவில் படுக்கச் செய்தாள். அவள் ஒரு நோயாளியைப்போல் அங்கு படுத்த பிறகு கமலவதி கீழே இறங்கிச் சென்றாள். அவளைக்கண்டதும் மனமோகனர். 'என்னம்மா! என்ன சங்கதி? நான் அவளைக் காணப் போகலாமா?' என்று கேட்டார். அதற்கவள், 'ஐயா, நான் மாடிக்குச் சென்று அவளிடம் இரத்தினபுரியிலிருந்து ஒரு வக்கீல் வந்திருப்பதாயும், அவருடன் இந்நகரத்தைச் சேர்ந்த ஒரு போலீஸ்காரனும் வந்திருப்பதாயும், சந்

திராபாய் என்னும் பெயரையுடைய மாதைத் தேடுவதாகவும் அம்மாது ஒரு கொள்ளைக்காரி என்று தெரிவித்ததாகவும் சொன்னேன். முதலில் அவள் அதிக கோபங் கொண்டிருந் தவள்போ லிருந்தாள். ஆனால் கொள்ளைக்காரி என்று நிச் சயமாகக் கூறவில்லை யென்றும், சந்தேகப் படுகிறார்களென் றும் தெரிவித்ததன் மீது அவள் கோபத்தை அடக்கிக் கொண்டாள். தான் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவ ளென்றும், இரத்தினபுரிக்கருகில் தனியான ஓரிடத்திலுள்ள வெண்மையான கட்டடத்தில் வசிப்பதாகவும் கூறினாள் என்று தெரிவித்தாள்.

உடனே மனமோகனர், 'ஆம்; அவள்தான். நான் தேடும் மாது அவளாகத்தான் இருக்க வேண்டுமென்று நம்புகிறேன். இருக்கட்டும், பார்ப்போம் இன்னும் அவள் என்ன சொன்னாள்' என்று ஆத்திரத்துடன் கேட்டார். அதற்கு அவள், 'நீங்கள் அவளைக்காண வாலாமென்றும், அவசியமானால் அந்தப் போலீசாரையும் அழைத்து வாலா மென்றும் சொன்னாள்' என்று கூறியதும் இரத்தினபுரி வக்கீ லான மனமோகனர், 'அப்படியே செய்கிறேன் நான் போலீ சாருடன் அவளைப்போய்ப் பார்க்கிறேன். கமலவதி! நீ எங் களுக்கு வழிகாட்டு' என்று சொன்னார். அவளும் அப் படியே வழிகாட்டிச் செல்ல மனமோகனரும் போலீஸ்கார னும் அவளது பின்னால் சென்றார்கள். இந்திராபாய் படுத் திருந்த அறையில் நுழைந்ததும், அதிக ஆவலுடன் இருந்த மனமோகனர் அம்மாதைக் கண்டதும், 'ஆ, அவள்தான், அவளே என்று நான் அறிவேன். அவளைப் போன்ற சகோ தரி ஒருத்தி இல்லையென்றால் அவளே என்னால் தேடப்படு பவள்?' என்று கூறிக்கொண்டே அவளருகில் சென்று, 'மாதே! உனக்கு ஒரு சகோதரி இருக்கிறாளோ' என்று ஆர் வத்துடன் கேட்டார்.

சோபாவின்மீது படுத்திருந்த அவள் எழுந்து சாயந்த வண்ணம் உட்கார்ந்து, 'இல்லை, ஐயா! எனக்குச் சகோதரிகளெவரும் கிடையாது' என்று பதிலளித்தாள். பிறகு மனமோகனர் அவளை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மிகக் கூர்ந்து நோக்கினார். அவளை இதற்கு முன் பல முறை பார்த்ததெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. முன்னாள் இரவு அவள் கொள்ளை யடிக்க முயன்றபோது ஆண்வேடம் தரித்த சமயத்தில் இருந்த நிலைமையும் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தார். அவளது உயரம், தோற்றம் முதலியவைகளையெல்லாம் கவனித்ததில் அவளே தான் தேடும் சந்திராபாயாக இருக்க வேண்டுமென்று நிச்சயித்தார். ஆகவே நீண்ட நேர யோசனைக்குப் பின்னர், 'சரி, இவளைப் போலீசார் வசம் ஒப்புவித்துவிட வேண்டியதே என்று முடிவு செய்து விட்டேன்' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் இந்திராபாய் அதிக ஆத்திரத்துடனும் கோபத்துடனும் கண்களில் தீப்பொறி பறக்க, என்னையா போலீசாரிடம் ஒப்புவிக்கப் போகிறீர்' என்று கேட்டாள். அதற்கு அவர் 'ஆம். உன்னைத்தான்' என்று கூறிவிட்டு உடனே போலீஸ் சேவகன் பக்கமாகத் திரும்பி, 'ஐயா, உன் வேலையை நீ பார்' என்றார். உடனே அந்தப் போலீஸ்காரனும், அம்மா! நீங்கள் என் காவலில் இருப்பதாகவே நினைத்துக் கொள்ளவேண்டும்' என்று கேட்டான். அதற்கு அம்மாது, 'அப்படியே ஆகட்டும். ஆனல் இந்தக் கனவான் யாரோ எனக்குத் தெரியவில்லை. அவர் யாராயினும் எனக்கென்ன? அவர் மீது நான் மானநஷ்ட தாவா தொடர்வே னென்பது நிச்சயம்' என்று மிரட்டப் பார்த்தாள்.

அதைக்கேட்டுக் கோப மடைந்த மனமோகனர், 'நாம்

இங்கே அதிகம் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இந்த வழக்கு இப்போதே இந்நகர சபைத் தலைவரால் விசாரிக்கப்பட வேண்டும். போலீஸ்காரா! அக்கைதியை நீ உன்னுடன் அழைத்து வா; நான் நகரமண்டபத்துக்கு வழி விசாரித்துக்கொண்டு போகிறேன். இருவரும் தனித் தனியே பிரிந்து செல்வோம்' என்று தெரிவித்து அவ் வறையினின்றும் புறப்பட்டார். அவர்வெளியே சென்றதும் இந்திராபாய் போலீஸ்காரனுடைய எதிரில் கமலவதியிடம், 'அம்மா கமலவதி! என் போர்வையைக் கொண்டுவா, நான் போய் வருகிறேன். எனக்கும் இந்த வழக்கு விரைவில் முடிந்துவிட வேண்டுமென்றுதான் விருப்பம்' என்று கூறியதும் கமலவதியும் அதைக் கொண்டுவந்து கொடுத்தாள். இந்திராபாய் நகர சபைத் தலைவரின் முன் ஆஜராவதற்கு வேண்டிய முறையில் தன்னை அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டாள். அவளது அழகைக் கண்டு எதிரிலிருந்த போலீஸ்காரனும் பிரமையடைந்தான்.

அப்போது கமலவதி, 'இவ்வழக்கு எங்களுடைய ஓட்டலின் கௌரவத்தையும் பாதிக்கக்கூடியதாக இருப்பதால் இதைப் பார்க்க நானும் எனது தாய் தந்தையரும் நகர மண்டபத்துக்கு வருகிறோம்' என்றாள். இந்திராபாயும், 'அப்படியே செய்யுங்கள். நீங்களெல்லாம் பின்னால் வாருங்கள். நான் இந்தப் போலீஸ் உத்தியோகஸ்தருடன் இப்போதே செல்கிறேன்' என்று கூறிவிட்டுப் போலீஸ்காரனைப் பார்த்து, 'ஐயா, இவ் வழக்கில் நான் குற்றவாளியல்ல என்பது இன்னும் சொற்ப நேரத்தில் வெளிப்பட்டுவிடும். ஆதலின் நீர் என்னை மரியாதையாகவே நடத்துவீர் என்று நம்புகிறேன்' என்று கூறினாள். போலீஸ்காரனும் மனமோகனருடன் அவ்விடுதிக்கு வந்தது முதல் அங்கு நடந்த விஷயங்களை எல்

லாம் கவனித்ததில் இந்திராபாய் குற்றவாளியாய் இருக்க முடியாதென்றும், இதில் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறதென்றும், கருதியபடியாலும், அப்படியிருந்தும் மனமோகனர் அவளைத் தன்னிடம் ஒப்படைத்ததைக் கண்டு ஆச்சரியமடைந்திருந்தபடியாலும், இப்போது அவள் தான் குற்றவாளியல்லவெனக் கூறியதும் போலீஸ்காரன் அது உண்மையாகவே இருக்கலாமென்று நினைத்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆகவே அவன், அவளை மரியாதைக் குறைவாக நடத்தப் போவதில்லையென்றும், அவள் தனக்கு முன்னால் நடந்து சென்றால் தான் சிறிது தூரத்துக்குப் பின்னால் வருவதாகவும் அதனால் ஜனங்களும் அவள் ஒரு கைதியென நினைக்காமலிருக்கக் காரணமாகுமென்றும் கூறினான். பின்னர் அங்கிருந்து நகர மண்டபத்துக்குச் செல்வதற்குரிய வழியையும் சொன்னான். பிறகு இருவரும் அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டனர். இந்திராபாய் முதலில் சென்றாள். அவளுக்குப் பின்னால் பதினைந்து கஜ தூரத்தில் போலீஸ்காரன் நடந்து சென்றான்.

இரத்தினபுரி வக்கீலான மனமோகனர் முன்னாடியே நகர மண்டபத்துக்குச் சென்று, தன் விவகாரத்தை முடித்துக் கொண்டு வெளியே செல்லத் தயாராக இருந்த நகரசபைத் தலைவரை, அவர் மற்றொரு அவசரமான வழக்கை விசாரிக்க வேண்டியதாக இருப்பதாகச் சொல்லி அவரை நிறுத்திவைத்தார். இந்த வழக்கு விசாரணையைப்பற்றி விசேஷமாக யாருக்கும் தெரியாதாகையால் இந்திராபாய் அம் மண்டபத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது அங்கு அதிக கூட்டமிருக்கவில்லை. இந்திராபாய் வந்து சேர்ந்த சொற்ப நேரத்துக்குள் ஓட்டல் சொந்தக்காரனை முருகேசன், அவனது மனைவி, கமலவதி, டாக்டர் ராஜபூஷணம், அவரது குமாஸ்தா

ஆகியே அங்கு வந்து சேர்ந்தனர் டாக்டரின் சாட்சியமும் இந்த வழக்குக்கு வேண்டியிருக்குமென முருகேசன் நினைத்ததால் வரும் வழியில் அவரையும் அவரது குமஸ்தாவையும் அழைத்து வந்தான். அவர்களும் தங்களிடம் மருந்து வாங்கிய ஒரு பெண்மணி இவ்வளவு கடுமையான வழக்கில் கைதியாயிருப்பது கண்டு ஆச்சர்யப்பட்டதுடன் இதில் ஏதோ தவறு இருக்க வேண்டுமென்றும் கருதினர்.

நகர சபைத் தலைவரும் வழக்கை விசாரிக்க ஆரம்பித்தார். இந்திராபாய் கைதிகள் நிற்கவேண்டிய கூண்டில் நிற்க வைக்கப்பட்டாள். அங்கு அவள் புன்சிரிப்புடனும் சிறிதும் அச்சமோ, கவலையோ இல்லாதவள் போலும் தைரியத்துடனும் மனோ உறுதியுடனும் நின்றாள். முருகேசன் குடும்பத்தாரும், டாக்டர் வகையறுக்களும் சாட்சிகள் உட்காருவதற்கென போடப்பட்டிருந்த பெஞ்சியின்மீது உட்கார்ந்தனர். மனமோகனரோ சாட்சியம் கூறப்படுவதற்கென ஏற்படுத்தப்பட்ட கூண்டில் நின்றார். உடனே மனமோகனர் பிரமாணம் செய்து தான் இரத்தினபுரியில் ஒரு பிரபல வக்கீல் என்றும், முன்னாள் இரவு கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணி ஹேமவதி சீமாட்டி வைத்த விருந்துக்குச் சென்று திரும்பியபோது சந்திராபாய் என்னும் அம்மாது குதிரையின்மீது ஆண்வேடத்துடன் வந்து கொள்ளையடிக்க முயன்றதாகவும் எல்லா விவரங்களையும், அவள் தன்னை ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டது உள்பட எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவித்தார்.

பின்னர் விசாரணைபுரியும் தலைவர் இந்திராபாயைப் பார்த்து, 'அம்மா! உன்மீது சாட்டப்பட்டிருக்கும் இவ்வழக்கு மிகவும் கடுமையானதாக இருப்பதால் நீ உனக்காக ஒரு வக்கீலை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு இவ் விசாரணையை ஒத்திவைக்க வேண்டுமென்று நீ விரும்புகின்றாயா?'

என்று கேட்டார். அவர் அவ்வாறு பேசும்போது தன் எதிரில் நிற்கும் அந்த அழகிய உருவத்தை உற்றுப் பார்க்காமலிருக்க அவரால் முடியவில்லை. அப்படிப் பார்த்ததில் அவள் மிக அழகுள்ளவளாயும் பெருந்தன்மையுடையவளாயும் காணப்பட்டபடியால் ஆச்சர்யமும் அனுதாபமும் அடைந்தார். அப்போது அவள் 'ஐயா, தாங்கள் இவ்வாறு யோசனை கூறியதற்காக நான் தங்களுக்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் தாங்கள் ஓட்டல் சொந்தக்காரர் கூறும் சாட்சியத்தையும், அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சொல்வதையும் கேட்பீர்களானால் எனக்கு வக்கீலின் உதவி வேண்டிய அவசியமில்லை என்பதை தாங்களே அறிந்து கொள்வீர்கள்? என்று தெரிவித்தாள்.

உடனே தலைவர், 'அப்படியானால் முருகேசன் சாட்சிக கூண்டில் ஏறட்டும்' என்றார். முருகேசனும் அவ்வாறே அங்கு நின்று பிரமாணம் செய்ததும் இந்திராபாய் அவனைப் பார்த்து, 'ஐயா! நான் உங்கள் ஓட்டலுக்கு எப்போது வந்தேன் என்பதை நிச்சயமாகச் சொல்வீரா?' என்று கேட்டதும் அவன், 'நேற்று மாலை சுமார் ஏழுமணிக்கு' என்று கூறியதும் விசாரணைத் தலைவர் திடுக்கிட்டுப் போனார். ஆகவே அவர் உடனே மனமோகனரைப் பார்த்து, 'ஐயா! நேற்று இரவு உமது வண்டி நிறுத்தப்பட்டு உம்மைக் கொள்ளையடிக்க முயன்றபோது மணி என்ன இருக்கும்' என்று கேட்டார். அதற்கு அவர், 'அப்போது சுமார் ஒரு மணி இருக்கலாம் என்று நினைக்கிறேன்' என்று கூறினார்.

தலைவர்:—ஆகவே இதில் ஏதோ தவறு இருக்கிறதென்று நீங்கள் கருதவில்லையா?

மனமோக:—ஆம்; நானும் இவ்விஷயத்தில் சிறிது குழப்பமடைந்திருக்கிறேன். ஆயினும் முருகேசனுடைய

குமாரி கமலவதியை விசாரணை செய்தால் நான் தேடும் அம்மாதே இவள் என்பதுமட்டும் ருஜுவாய்விடும் என்று நம்புகிறேன்.

விசாரணைத் தலைவரின் கட்டளைப்படியே கமலவதி சாட்சிக் கூண்டில் ஏறியதும் அவளைப் பார்த்து மனமோகனர், 'கமலவதி! இந்த அம்மாள் எங்கு வசிப்பதாக உன்னிடம் கூறினாள் என்பதை உண்மையாகச் சொல்வாயா?' என்று கேட்டதும் கமலவதி, 'ஐயா, அவள் இரத்தினபுரிக்கடுத்த தனியான ஒரு இடத்தில் கட்டப்பட்டுள்ள வெண்மையான ஒரு விடுதியில் வசிப்பதாகக் கூறினாள்' என்று தெரிவித்தாள். உடனே மனமோகனர் விசாரணைத் தலைவரிடம், 'ஐயா, பார்த்தீர்களா! அந்த மாளிகையிலிருந்துதான் என்னைக் கொள்ளையடிக்க முயற்சிசெய்தவளும் தப்பி ஓடினாள் என்று நான் தெரிவித்தேனல்லவா? ஆகையால் அவள் இருப்பிடத்தையும், தோற்றத்தையும் நோக்கும்போது இவளே நான் குறிப்பிடும் பேர்வழி என்பது நிச்சயமாகிறதல்லவா? என்று கேட்டார்.

அப்போது இந்திராபாய் மனமோகனரைப் பார்த்து, 'ஐயா! நேற்றிரவு சுமார் ஒரு மணிக்கு உமது வண்டி நிறுத்தப்பட்டுக் கொள்ளையடிக்க முயற்சி செய்யப்பட்டதாகக் கூறினீரே! பிறகு நான் அவ்விடுதியினின்றும் தப்பித்துச் சென்றது எப்போது என்று நினைக்கிறீர்கள்' என்று கேட்க அவர், 'தப்பித்துச் செல்லும்போது சுமார் இரண்டு மணி இருக்கும்' என்று தெரிவித்தார். உடனே இந்திராபாய் விசாரணைத் தலைவரிடம், 'ஐயா! அந்த நேரத்தில் நான் நாகபுரியில் முருகேசனுடைய ஒட்டலில் ஒரு அறையில் அதிக ஜுரத்துடன் படுத்துக்கொண்டிருந்தேனே. அப்படியிருக்க நான் எப்படி அங்கு இருந்திருக்க முடியும்! ஒரே காலத்தில்

இந்த இரண்டு இடங்களிலும் இருக்க என்னல் முடியுமா என்பதில் முடிவு கூறும் பொறுப்பை உங்களிடமே ஒப் படைத்து விடுகிறேன்' என்று பணிவுடன் கூறினாள்.

அச்சமயத்தில் டாக்டர் ராஜபூஷணத்தின் குமாஸ்தா முன்வந்து, 'ஐயா! இவ்விஷயத்தில் நான் ஒரு முக்கியமான சாட்சியம் கூற முடியுமென நினைக்கிறேன். கூண்டில் இருக் கும் கைதியை என் வாழ்க்கையில் இதற்குமுன் பார்த்ததில்லை யென்றாலும் என்னைப்போன்ற மானிட சமூகத்தைச் சேர் ந்த ஒரு சகோதரியின் சுதந்தரத்துக்கும், நற்பெயருக்கும் ஆபத்து வந்திருக்கும்போது நான் சும்மா இருந்துவிடுவது தர்ம விரோதமாகுமல்லவா?' என்று கூறினன். விசாரணைத் தலைவர் அக் குமாஸ்தா கூறப்போகும் சாட்சியத்தையும் கேட்க விரும்பியதால் அவன் பிரமாணம் செய்துவிட்டு விடி யற்காலை சுமார் மூன்று மணிக்கு முருகேசன் தன் வைத்திய சாலைக்கு வந்ததாகவும், சந்திராபாய் என்னும் பெயரை யுடைய ஒரு மாது வலிப்பு, ஜுரம் முதலியவற்றால் அவஸ் தைப்படுவதால் ஏதேனும் மருந்து கொடுக்கும்படி கேட்ட தாகவும், தானும் ஒரு பாட்டில் மருந்து கொடுத்ததாகவும் கூறினன்.

பிறகு டாக்டர் ராஜபூஷணமும் சாட்சிக் கூண்டில் ஏறி பிரமாணம் செய்துவிட்டுத் தான் காலை எட்டு மணி சுமா ருக்கு முருகேசனுடைய ஓட்டலுக்குச் சென்று, இப்போது கைதியாகக் கூண்டில் இருக்கும் மாதைப் பார்த்ததாகவும், அப்போது அவள் உபாய ஜுரத்துடன் இருந்ததாகவும் கூறினர். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த விசார ணைத் தலைவர், 'நான் விசாரித்த வழக்குகளெல்லாவற்றையும் விட இது மிக்க விசேஷமானதாக இருக்கிறது. இந்த அம் மாள் நேற்று இரவு ஏழு மணிக்கே முருகேசனுடைய ஓட்ட

லுக்கு வந்தது வாஸ்தவம்தானே' என்று கேட்டார். உடனே முருகேசன், 'ஆம், ஐயா! இப்போது நான் தங்கள் எதிரில் நிற்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையாகவே கூறுகிறேன். அவள் நேற்றிரவு ஏழுமணிக்கே என் ஓட்டலுக்கு வந்தாள். இதை என் மனைவியும் குமாரியும் கூடச் சொல்வார்கள். மேலும் இதோ இந்தக் கணக்கைப் பாருங்கள். நேற்று மாலையே அவள் வந்ததும் சிற்றுண்டி அருந்திய கணக்கும் எழுதப்பட்டிருக்கிறது. நான் அன்றாடம் அந்தந்த தினத்தின் கணக்கை எழுதி முடித்துவிடுவது வழக்கம்' என்று கூறிக்கொண்டே தன்னிடமிருந்த கணக்கு புஸ்தகத்தையும் காண்பித்தான்.

விசாரணைத் தலைவரும் அதைப் பார்த்துவிட்டு மனமோகனரை நோக்கி, 'உண்மையில் இவ்வழக்கு தவறுதலாக ஏற்பட்டது என்று தான் நினைக்கிறேன். ஒருகால் இந்த மாதுக்கு இவளைப்போன்ற ஒரு சகோதரி இருக்கிறாளோ' என்று கேட்டார். உடனே மனமோகனரும், 'ஐயா, நானும் ஓட்டலில் இந்த மாதைக் கண்டதும் இவ்வாறுதான் கேட்டேன். அதற்கு அவள் தனக்குச் சகோதரி யாரும் கிடையாதென்று தெரிவித்துவிட்டாள்' என்று தெரிவித்துவிட்டு மேலும் கூறியதாவது:—விசாரணைத் தலைவர் அவர்களே! நேற்று இரவு எங்களைக் கொள்ளையடிக்க முயற்சி செய்தவள் தன் பெயர் சந்திராபாய் எனக் கூறிக்கொண்டாள். இப்போது நம் எதிரில் கூண்டில் நிற்கும் இம்மாதும் தன் பெயர் சந்திராபாய் எனக் கூறுகிறாள். இவள் எந்த இடத்தில் தான் வசிப்பதாகக் கூறுகிறாளோ அதே விடுதிக்குத்தான் எங்களைக் கொள்ளையடிக்க முயற்சித்த மாதும் எங்களை அழைத்துச் சென்றாள். மேலும் நான் இந்த மாதைப் பலமுறைகளில் ஆண் வேடத்துடனும் பெண்

வேடத்துடனும் குதிரைமீது ஏறிக்கொண்டு அவ்விடுதிக் கருகிலுள்ள ரஸ்தாக்களில் செல்வதைக் கண்டிருக்கிறேன். ஆகவே எங்களைக் கொள்ளையடிக்க முயன்ற மாது இவளே என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் முருகேசனும், டாக்டரும் கூறும் சாட்சியத்தைக் கேட்டால் எனக்கும் சிறிது குழப்பம் ஏற்படுகிறதென்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆயினும் எங்களைக் கொள்ளையடிக்க முயற்சித்த மாது இவளல்லவென்றால் இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்றே நிச்சயமாக நினைக்கவேண்டியிருக்கிறது. அம் மர்மத்தைக் கண்டு பிடிக்கவேண்டியிருப்பதாலும், இத்தகைய பெரிய வழக்குகளை இன்னும் மேலதிகாரிகள் விசாரிப்பது நலமாதலாலும் இவ்வழக்கை இரத்தினபுரி கோர்ட்டுக்கு மாற்றிவிட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். எப்படியாவது குற்றவாளியைத் தண்டிக்க வேண்டியது அவசியமல்லவா?

இதைக்கேட்ட விசாரணைத்தலைவர் தது குமாஸ்தாவுடன் சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, 'இந்த வழக்கில் தீர்ப்புக் கூறுவதில் எனக்குச் சிறிது சிரமமிருக்கிறது. இந்நகரில் பிரபல ஓட்டல் வைத்திருக்கும் கண்ணியம் வாய்ந்த கனவான் சாட்சியம் கூறியதிலிருந்து எதிரி நேற்று இரவு முழுதுமே இங்கிருந்ததாகத் தெரிவதால் அவள் தன் மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றம் செய்திருப்பாள் என்று நினைக்க இடமில்லாமலிருக்கிறது. மேலும், பிரபல டாக்டரான ராஜபூஷணம் எதிரியை இன்று காலை எட்டு மணிக்கு இவ்வூர் ஓட்டலில் நோயுடன் இருந்ததைப் பார்த்ததாகக் கூறுகிறார். நேற்றிரவு மூன்று மணிக்கு இரத்தினபுரிக் கருகிலிருந்த ஒருமாது இன்று காலைக்குள் எப்படி இங்கு வந்து சேர்ந்துவிட முடியும் என்பதையும் யோசிக்க

வேண்டியதாய் இருக்கிறது. இந்த இடைக்காலத்துக்குள் இங்கு வந்து சேரக்கூடிய ரயில்வண்டி எதுவும் கிடையாது. அந்த இடத்துக்கும் இந்நகருக்கும் இடையில் எண்பது மைல் இருப்பதால் இவ்வளவு குறுகிய கால அளவுக்குள் அவள் எவ்விதமாகவும் இங்கு வந்திருக்க முடியாது. குதிரை மீதே சவாரி செய்து இவ்வளவு தூரத்தையும் கடந்திருப் பாளோ என்று நினைக்கவும் முடியவில்லை. ஏனெனின் எந்த ஒரு குதிரையும் இவ்வளவு தூரம் ஓடவே ஓடாது. ஆதலின் முன்னேற்பாடு செய்துகொண்டு இடையிடையே வேறு குதிரைகளை மாற்றியிருந்தாலொழிய இந்த தூரத்தைக் கடந் திருக்க முடியாது ஆகவே இம்முறையில் அவள் பிரயாணம் செய்திருப்பாளென்று நினைப்பது தவறாகும். இம்மாது நேற்றிரவு முதலே இங்கிருப்பதாக ஓட்டல் சொந்தக்காரரும், இன்று காலை எட்டு மணிக்கு இம்மாதைக் கண்டதாக டாக் டரும் சொல்வதுடன் விடியற்காலை மூன்று மணிக்கே இம் மாதுக்காக மருந்து வாங்கிச் சென்றதாக டாக்டரின் குமாஸ்தா சொல்கிறார். ஆகவே இவைகளை யெல்லாம் கவ னிக்கும்போது இவ்வழக்கு தவறுதலாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற தென்றும், இதில் ஏதோ ஆள் மாறாட்டம் ஏற்பட்டிருக்கிற தென்றும் கருதி எதிரியை விடுதலை செய் வது தவிர வேறு வழி எனக்கில்லை' என்று கூறினார்.

விசாரணைத் தலைவரின் இத்தகைய தீர்ப்பைக் கேட்ட தும் மனமோகனர் ஆத்திரத்துடன் சாட்சிக் கூண்டின்மீது தன் கையால் ஒரு அறை அறைந்து, 'ஐயா, தலைவரே! இவ் வழக்கிலுள்ள சந்தர்ப்பங்களை யெல்லாம் கவனிக்கும்போது உங்களுடைய தீர்ப்பைப்பற்றி நான் எத்தகைய குறையை யும் கூறமுடியாது. ஆயினும் நான் இனி என் கண்களையே நம்புவதற்கில்லை' என்று கூறியதும் தலைவருக்கு வணக்கம்

செலுத்திவிட்டு அவ்விடத்தைவிட்டகன்றார். இந்திராபாய் தன்னுடைய நண்பர்களுடன் முருகேசனுடைய ஓட்டலுக்குச் சென்றாள். அங்கு போய்ச் சேர்ந்ததும் டாக்டர் ராஜபூஷணம் இந்திராபாயிடம், சிறிது நல்லமருந்து உட்கொள்ளும்படியும், நன்றாகத் தூங்கி ஓய்வெடுத்துக் கொள்ளும்படியும் கூறினார். அவளும் அவ்வாறு செய்வதாக ஒப்புக்கொண்டாளென்றாலும் டாக்டரும் அவரது குமாஸ்தாவும் அவ்விடத்தை விட்டுச் சென்றதும் அவள் முருகேசனுடைய குடும்பத்தாருடன் நல்ல பதார்த்தங்களுடன் அறுசுவையுண்டியையும் நன்றாக அருந்தினாள். அவர்கள் அவ்வாறு இன்பமாகச் சாப்பிடும்போது இரத்தினபுரி வக்கீல் மனமோகனர் அடைந்த ஏமாற்றத்தையும் மனக்குழப்பத்தையும் பற்றிச் சிந்தித்துப் பலவாறு பேசி அனைவரும் சிரித்தனர்.

இந்திராபாய் உண்மையிலேயே குற்றம் புரிந்தவளாக இருந்தும் அவள்மீது சாட்டப்பட்ட குற்றம் ருஜுவாகவில்லை என்பதற்காக அவள் விடுதலை செய்யப்பட்டது போலவே இப்போதும் நமது கோர்ட் விவகாரங்களிலும்கூட எத்தனையோ வழக்குகள் ருஜுவாகவில்லையென்பதற்காக உண்மைக்கு மாறான தீர்ப்புகள் சொல்லும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. ஆதலால்தான் அங்கிங்கெனாதபடி எங்கும் நிரம்பியிருந்து ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் நன்கு அறியக்கூடிய சக்தி வாய்ந்த எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே உண்மையை உணரவல்லவன் என்பது நன்கு புலனாகிறதல்லவா? ஆகவே உலக மாஜிஸ்ட்ரேட்களின் தீர்ப்பை நம்புவதைவிட இறைவன் பொறுப்பில் எதையும் விட்டு விடுவது நலம். தீயாரைத் தண்டித்து நல்லாரை ஆதரிப்பதே இறைவனது கொள்கையாதலால் நமக்கு யாரேனும் எத்தகைய தீங்கு செய்தாலும் அவர்களைக் கடவுள் பார்த்துக் கொள்

ளட்டும் என்று விட்டுவிடுவதே நலம். இதனால் நாட்டில் கோர்ட் விவகாரங்கள் குன்றி மக்களிடையே பரஸ்பர அன்பும் விசுவாசமும் அதிகரிக்க இடமுண்டாகும்.

## 21-வது அத்தியாயம்

### நாடகக் கோட்டகையில் விசேஷம்

இரத்தினபுரியிள்ள பிரபல நாடகக் கொட்டகையான கிரௌன் தியேட்டரில் ஏற்படுத்தப்பட்டுள்ள விவரங்களைப்பற்றிக் கூறுவது ஒரு பெரிய அத்தியாயமாக முடியும். கொட்டகையில் மேடைக்குப் பின்னால் திரை மறைவில் நடக்கும் காரியங்கள் பல. அதிலும் எத்தனையோ ஆடவரும் மாதரும் வேலைக்கு அமருகின்றனர். அவர்களுடைய சம்பளக் கணக்குகளையும் வரவு செலவு கணக்குகளையும் வைப்பதும் ஒரு பெரிய வேலையாக இருக்கும். அதற்கெனப் பல குமாஸ்தாக்கள் இருப்பார்கள். நாடக மேடையில் ஏறுமலும் பொதுஜனங்களுக்குத் தெரியாமலும் பல ஆடவரும் மாதரும் நாடகக் கம்பெனியில் சில்லறை வேலைகளைச் செய்கிறார்கள். ஒவ்வொரு முக்கிய நடிகருக்கும் தனி யறைகள் இருக்கும். நாடகம் ஆரம்பிப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்பே அவர்கள் தங்கள் தங்கள் அறைகளுக்கு வந்து விடுவார்கள்.

இராக் காலங்களில் பலவித வர்ணங்களையுடைய மின்சார விளக்குகளுடனும் எங்குபார்த்தாலும் எள்விழ இடமில்லாத திரளுடனும் இருக்கும்போது பார்த்தால் அந்நாடகக் கொட்டகையின் அழகும், அதன் நிர்வாக முறையும் நன்கு

விளங்கும். அங்குள்ள ஒவ்வொருவரும் தனது கடமை என்ன? அதை எப்படிச் செய்வது? என்பதை நன்ருக அறிந்திருந்தால் ஒருவரும் எதையும் சொல்லாமலே இயந்திரத்துக்குச் சாவி கொடுத்துத் திருப்பிவிட்டால் உடனே அதற்கு சம்பந்தப்பட்ட வெல்லாம் தன் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுவதேபோல், மணி யடித்ததும் ஒவ்வொருவரும் தன் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். ஒரு காட்சி முடிந்ததும் இரண்டாவது காட்சி காண்பிக்கப்படு முன்னர் ஏற்படும் இடைவேளையில் கோமாளி வேடம் தரித்த எவரேனும் வந்து ஜனங்களுக்கு மகிழ்ச்சியை யூட்டுவாரென்ருலும், அதில் அவ்வளவாக மனம் செல்லாத சோபாக்களில் வீற்றிருக்கும், உலக கஷ்டமே இன்னதென்றறியாது செல்வத்திலேயே பிறந்து அதிலேயே வளர்ந்துள்ள ஆண்களும் பெண்களுமான காதலர்கள், கழிந்துபோன காட்சியில் நடிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றிப் பலவிதமாகத் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம், அவர்கள் நினைப்பதும் சொல்வதுமே அனுபவம் வாய்ந்தவர்களின் முடிவு போல், பேசிக்கொள்வார்கள். இதற்குள் அடுத்த காட்சியும் காண்பிக்கப்படும். உடனுக்குடன் காட்சிகள் பல அடுத்தடுத்துக் காண்பிக்கப்படுவதால் திரைக்குள் எவ்வளவு வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன என்பது தெரிகிறதல்லவா? ஆகவே நாடகத்தை நிர்வகிப்பதும், அதை ஒழுங்காக நடத்துவதும் சாமான்ய வேலையல்ல. அதுவும் ஒரு பெரிய உத்தியோகசாலை போன்ற கடினமான நிர்வாகத்தை யுடையதேயாகும். மேலும் அந்நாடகத்தில் சேர்ந்து நடிப்பர்களுக்கும் பாடுபவர்களுக்கும், மற்றும் பல வேலைகளைச் செய்பவர்களுக்கும் மாதவாரி சம்பளம் கொடுக்கப்படுகிற தென்பதைக் கவனிக்கும்போது கம்பெனியின் முதலாளிக்கு எவ்வளவு செலவு இருக்கிற தென்பதும் தெரியும். நாடகத்தில் அதிக லாபம்

கிடைக்குமெனக் கூறலாம். ஆயினும் லாபம் வந்தாலும் வரா விட்டாலும் முதலாளி எல்லாருக்கும் சம்பளம் கொடுக்க வேண்டியது அவசியமிருப்பதால் அவர் எவ்வளவு செலவு செய்ய வேண்டுமென்பது விளங்கும்.

நாடகக் கொட்டகையில் நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்னரே ஜனங்கள் கூடிவிடுவார்களாதலால் சிறிது செல்வமும் செல்வாக்கு முடையவர்கள் திரைக்குள் சென்று, நாடகத்தில் நடிப்பதற்காகவோ, பாட்டுப் பாடுவதற்காகவோ அங்கு வந்திருக்கின்ற பெண்களுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண் டிருப்பார்கள். எல்லாப் பெண்களும் தூரத்தி லிருந்து பார்ப்பதற்கு மிக அழகுள்ளவர்களைப்போல் தோன் றினும் அருகில் சென்று பார்த்தால் அவர்களுடைய குட்டு வெளியாய் விடும். யாரோ சிலர்தான் இயற்கை யழ குடையவர்களா யிருப்பார்கள். நாடகப் பெண்களில் பலர் மெலிந்த தேகமுடையவர்களாயும், பலஹீனர்களாயும், காசம் முதலிய நோயுடையவர்களாயும் இருப்பார்கள். ஏனெனின் அவர்கள் தினந்தோறும் இரவில் நீண்டநேரம்வரையில் விழித்துக்கொண் டிருப்பதுடன் ஓவென்று கத்திப் பாட வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுடைய சிரமத்துக்குத் தக்க போஷணை அவர்களுக்கு இருப்பதில்லை. இராக்காலங்களில் மட்டுமன்றி பகலிலும் அவர்கள் ஆடியும் பாடியும் இரவுக்குத் தயாராகவேண்டும். மேலும் சில பெண் கள் துஷ்டர்களுடைய சகவாசத்துக் காளாகிக் குடி முதலிய கெட்ட பழக்கங்களுக்கும் உள்ளாகித் தேகத்தைக் கெடுத் துக் கொள்கின்றனர். ஆனால் இப்போது நாம் கூறியதெல் லாம். குறைவான ஊதியத்தைப்பெறும் பெண்களைப்பற் றியேயாம் அதிக வருவாயைப் பெறும் மாதர்கள் சுக போகங்களை நன்கு அனுபவிப்பதால் அவர்கள் சிறிது தேக

வலிமை யுடையவர்களாகவே இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் நாடக முதலாளியின் ஆதரவிலேயே இல்லாமல், அப்போதைக் கப்போது நாடகத்துக்கு வந்து தங்களுக்குச் சேரவேண்டிய பெருந்தொகையை வசூலித்துக்கொண்டு தனியே வாழ்வர். அவர்கள் கண்ட ஆடவர்களுடன் திரியாமல் தங்களுக்கு இஷ்டமான பெரிய செல்வர்களைக் காதலர்களாகக் கொண்டு இன்பமாக வாழ்க்கையை நடத்துவர். சாதாரண நிலைமையிலுள்ள வாலிபர்களோ, நாடகக் கம்பெனியைச் சேர்ந்த ஆடவர்களோ அவர்களிடம் தங்கள் வாலை ஆட்டமாட்டார்கள். அவர்களுக்கே ஒருவிதமான மதிப்பு இருக்கும்.

கம்பெனியின் ஆதரவிலேயே உபாய ஊதியம் பெற்றுக் காலங் கழிக்கும் ஆண் பெண்களுக்குத்தான் கஷ்டம் அதிகம். இவ்வளவு சங்கடத்திலுள்ள அத்தகைய பெண்களை அவர்கள் வேஷம் போட்டுக்கொண்டு நடிக்கும்போது தோன்றும் அழகைக் கண்டு பல ஆடவர்கள் ஏமாந்து அவர்களுடைய இன்ப மனுபவிப்பதே சுவர்க்கமென்று நினைத்து அதற்காகப் படாத பாடுபட்டுக் கையிலுள்ள திரவியத்தையெல்லாம் செலவழித்து, இறுதியில் அவர்களை யடைந்ததும், அவர்களுடைய மெலிந்த தேகத்தையும், நோயையும், பலஹீனத்தையும் கண்டு மனம் புழுங்குகின்றனர். நாடகங்களுக்குச் செல்லும் பெண்களில் சிலர் தங்கள் அறியாமை காரணமாக, நாடகங்களில் சேர்ந்து கம்பெனிகளின் ஆதரவில் இருந்துவிட்டால் இவ்வுலகத்திலுள்ள இன்பங்களையெல்லாம் அனுபவித்துச் சுகபோகங்களை நுகரலாம் எனக் கருதி நாடகத்தைச் சேர்ந்த ஆடவர்களின் மாய சொற்களில் மயங்கி, கொண்ட கணவனை விட்டோ, அல்லது விதவைகளான போதும் தங்களைக் காப்பாற்றும் தாய் தந்தையரையோ

உறவினரையோ விட்டோ, நாடகங்களில் சேர்ந்து பின்னுல் அவதிபட்டுக் கண்ணீர் விடுகின்றனர். நாடகக்காரர்கள் ஆரம்பத்தில் அப்பெண்களுக்கு எதுவோ சுகமாக வைத்துக் கொள்வதுபோல் பாவனை செய்தாலும் பின்னர் அவர்களை யும் மற்றவர்களைப்போலவே அலட்சியம் செய்துவிடுகின்ற னர். இது எப்படி இருக்கிறதென்ருல் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள், அம்மதத்தில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமை காரணமாகவோ அல்லது தற்காலத்தில் ஏற்படு வதுபோன்ற பிறமதங்களைச் சேர்ந்தவர்களால் அளிக்கப் படும் சுகசௌகரியங்களைக் கண்டோ தங்கள் மதத்தைவிட் டுப் பிறமதங்களில் சேருவார்களானுல் முதலில் எல்லாம் சௌகரியமாகத்தான் நடக்கும். ஆடம்பரமாக விருந்து முதலியவற்றை வைத்துப் பிறமதத்தில் சேர்க்கும் சடங்கைச் செய்வார்கள். புகைப்படமும் பிடிப்பார்கள். பத்திரிகைகளி லும் போடச் செய்வார்கள். முதல் சில மாதங்கள்வரை அப்பிற மதத்தைச் சேர்ந்த சிலர் பிரிவு போட்டுக்கொண்டா வது புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு உதவி செய்வார்கள். பிறகு ஐயோ! அவர்கள் கதி அதோ கதிதான். அவர்களைக் கேட்பாரில்லை. இங்கும் கெட்டு அங்கும் கெட்டு அலைய வேண்டியதுதான். 'பொருளிலார்க் கிவ் வுலகமில்லை' என் றும், 'கற்ருேர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என் றும் கூறியிருக்கிறபடி இவ்வுலகில் கல்வியும் பொருளும் இருந்தால் எந்த ஜாதி மதத்தினராயினும் மரியாதை யுண்டு ஏழைகளுக்கும் பாமரர்களுக்கும் எங்கும் கஷ்டமே. ஆத லின் எல்லாரும் இன்புற்றிருக்கும் வகையில் சமூக அமைப் பைத் திருத்த வேண்டுமே யொழிய ஒரு மதத்திலிருந்து பிற மதம் புகுவதாலோ, பல மதத்தினரும் சண்டையிட்டுக் கொள்வதாலோ ஒரு நன்மையும் விளையாது. எல்லா மதங்க

ளும் இறைவன் அருள்நெறியைக் காட்டுவன வாதலின் பாரமார்த்திகத்துக்காக மதமாறுதல் அவசியமில்லை.

இனியும் நாம் வேறு பல விஷயங்களைப்பற்றி விவரித்துக்கொண்டிராமல் கதையின் தொடர்ச்சியைத் தொடங்குவோம். நாம் மேலே கூறிய இரவில் அந்நாடகக் கொட்டகையில் திரைக்குப் பின்னால், ஒரு அறையில் பல பெண்களும் பல ஆடவர்களும் கூடிப் பலவாறு பேசிக்கொண்டிருந்தார்கள். அன்றிரவு ராஜலட்சுமி அங்கு நடிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தும் அவள் அக்கூட்டத்தில் இருக்கவில்லை. ஆனால் அவள் கொட்டகைக்கே வரவில்லை என்பது அர்த்தமல்ல. தனக்கெனப் பிரத்யேகமாக ஒதுக்கி வைக்கப்பட்ட அறையில் அவள் இருந்தாள். அவள் கண்டபடி கண்டவர்களுடன் பேசும் வழக்கமில்லை. தான் மேடையில் தோன்ற வேண்டிய சமயத்தில் மட்டும் தோன்றி மற்ற சமயங்களில் தன் அறையிலேயே தங்கி யிருப்பாள். அக்கூட்டத்தில் காணப்படாமல் இருந்தவர்களில் பங்கஜம் என்னும் கமலகுமாரியும் ஒருத்தி. அவளும் தனது தனி அறையில் தங்கியிருந்தாள். ஆனால் கமலகுமாரி ராஜலட்சுமியைப்போல் கவலை யற்றவளாக இருக்கவில்லை. யாரையோ எதிர்பார்த்து அவர் வரவில்லை என்பதனால் ஆத்திரமும் கவலையும் அடைந்திருந்தாள். அவள் எதிர்பார்த்த ஆள் யாரென்று வாசகர்களும் யூகித்தறிந்து இருக்கலாம். அதற்கு முன்னாள் இரவு அவளை அவளது விடுதியில் சந்தித்து அவளைத்தன் இன்னுயிர்க் காதலியாக ஏற்றுக்கொள்வதென்று உறுதிகூறிய தினகரம் பிரபுவையே அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அவள் உடை உடுத்திக் கொண்டிருக்கிறளோ, இல்லையோ என்று சந்தேகம் தோன்றும்படியான அவ்வளவு மெல்லிய உடைகளை அவள்

அணிந்திருந்தாள். வைர நகைகள் அவளது அழகை அதி கப்படுத்தின, அவள் கம்பெனியின் ஆதாவிலேயே இல்லா மல் இருந்ததாலும், நல்ல புஷ்டியான ஆகாரத்தை உட் கொண்டு வந்ததாலும் மெலிந்து போகாமல் தேக திடத் துடனேயே இருந்தாள். அவளது கரியகூந்தலும், பிரகாசம் மிக்க கண்களும், அழகிய பற்களும் அவளைக்கண்டோர் மன தைக் கவரச் செய்தன.

அவள் இருக்கும் அறையின் பக்கமாகவும் பல இளங் காளையர் சென்று அவளை எட்டிப்பார்த்து அவள் வாய் திறந்து ஏதேனும் பேசுவாளோ என்று ஆவலுடன் காத்துக் கிடந்தனர். அவள் அவர்களை யெல்லாம் லட்சியம் செய்யா மலும், கண்ணெடுத்தும் பாராமலும் இருந்தாள். உண்மையி லேயே பெரிய ஜமீனுக்குச் சர்வாதிகாரியாகப் போகும் உரி மையையுடைய தினகரம் பிரபு அவள் மோகவலையில் சிக்கிக் கொண்டிருக்கிறபோது அவள் மற்றவர்களை லட்சியம் செய்ய வேண்டிய அவசியமென்ன இருக்கிறது? மேலும் மற்றவர் களை நேசிப்பதாகத் தெரிந்தாலும் தினகரன் மனவெறுப்புக் கொண்டால் என்ன செய்வதென்னும் அச்சமும் அவளுக்கு அதிகமாகவே இருந்தது. இதனால் அவள் தினகரனை நேசித்ததெல்லாம் அவனிடம் தெய்வத்தன்மை வாய்ந்த காதலோ அல்லது உண்மையான அன்போ கொண்டல்ல என்பதும், தன் சுயநலத்துக்காகவே அவனை நேசித்தா ளென்பதும் விளக்கமாயிற் றல்லவா? இதனாலேயே நமது பெரியோர்களெல்லாம் வேசையர்களின் லட்சணத்தைப்பற்றி அவ்வளவு கேவலமாகச் சொல்லி யிருக்கிறார்கள். கொண்ட கணவனையோ அல்லது மனமார நேசித்து முழுமனதுடன் ஆதரித்துவரும் அன்பனையோ ஏமாற்றி அல்லது துரோகம் செய்து பணத்துக்காகவும், இதர சௌகரியங்களுக்காகவும்

மானத்தை விற்கிறவர்களை நம்பவும் முடியுமோ? இதனால் நாம் மாதர் இனத்தையே தாழ்மைப் படுத்துவதாக எவரும் கருதலாகாது. மாதர்களோ ஆடவர்களோ விபசாரம் செய்வதாயின் அத்தகைய சமூகக்கேட்டைச் சிறிதும் தாட்சண்யமின்றிக் கண்டிக்க வேண்டியது அவசியமாகும்.

கவலையுடன் இருந்த கமலகுமாரியின் முகத்தில் ஒருவித மான பிரகாசம் வீசத் தொடங்கிற்று. அதற்குக் காரணம் தூரத்தில் வந்துகொண்டிருந்த தினகரம் பிரபுவின் கண்களும் அவளது கண்களும் பரஸ்பரம் சந்தித்ததேயாகும். தினகரனும் வழியில் தனக்குத் தெரிந்த ஒருவரிருவர் இருந்ததைக் கண்டும் புன்முறுவல் செய்துகொண்டே சாசரவென்று நடந்து கமலகுமாரி இருந்த இடத்துக்குச் சென்றான். உடனே அவள் அவனது கரத்தைப் பிடித்து அதை அதரத்தில் வைத்துக்கொண்டு, 'ஏன் இவ்வளவு நேரம்! நீங்கள் வரமாட்டீர்கள் என்று நினைத்து நான் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

தினகரன்:—எனதன்புள்ள கண்மணி! நான் எனது நண்பர் சந்திரசேகரம் பிரபுவினுடனும் மற்றும் பல பிரமுகர்களுடனும் விருந்து சாப்பிட்டேன். பிறகு நாங்கள் சிறிது நேரம் சீட்டாடிக் கொண்டிருந்தோம். அதனால் மணி ஆனதே எனக்குத் தெரியவில்லை. ஆயினும் மணி ஆகிவிட்டதென்று தெரிந்ததும் மிக அவசரமாக ஓடிவந்தேன். ஆதலால் என்மீது வருத்தம் வேண்டாம். கவலையின்றிச் சந்தோஷமாக இரு.

கமல:—சரி, அப்படியே ஆகட்டும். வருத்தமின்றியும் சந்தோஷத்துடனும் இருக்கிறேன். ஆனால் நீங்கள் மட்டும் தயவு செய்து மறுபடியும் ராஜலட்சுமியின் மோகத்தில்

சிக்கிக் கொள்ளாதீர்கள். அவள் இன்றிரவு நடிப்பாள். புத்தி தடுமாற்றம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

தினகரன்:—இல்லவே இல்லை. இனி நான் ஒருகாலும் அவளைக் கண்டு மோகிக்கமாட்டேன். இன்னும் உன்னிடம் ஒரு உண்மை சொல்லுகிறேன் கேள். எனது நண்பன் சந்திரசேகரம் பிரபு அவளை யடைய முயற்சி செய்யப் போகிறான். அவனிடமும் நான் இனி அவளுக்காக முயற்சி செய்யமாட்டேனென்றும், அவன் முயற்சி செய்வதுபற்றி நான் கவலைப்படப் போகிறதில்லை யென்றும் சொல்லிவிட்டிருக்கிறேன்.

கமல:—ஐயா! அவள் கர்வம் பிடித்தவள். அவர் எப்படியாவது போகட்டும். நீங்கள் அவள் பக்கம் பார்க்க வேண்டாம். நான் இன்று காலையில் சொல்லியனுப்பிய விஷயத்தில் கவனம் செலுத்தினீர்களா? என்னிடம் தங்களுக்குள்ள அபிமானத்தின் அறிகுறியாக ஏதேனும் செய்வதாகச் சொன்னதால்தான் நான் சொல்லி யனுப்பினேன். இல்லாவிட்டால் நான் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கவே மாட்டேன்.

தினகரன்:—நீ கேட்டது இதோ இருக்கிறதே. நீ உன் கடிதத்தில் தெரிவித்தபடியே நான் அந்த மார்வாரியிடம் சென்றுதான் பணத்தை வாங்கினேன். இல்லாவிட்டால் இப்போதுள்ள நிலைமையில் என்னிடம் பணம் ஏது? எனது காரியஸ்தர்களான பஞ்சநதம் பிரபுவும், மனமோகனரும் எனக்குச் சேரவேண்டிய அலவன்ஸைக் கொடுக்கவே கஷ்டப்படுகிறார்கள். அப்படியிருக்க இவ்வளவு பெரிய தொகை அவர்களிடமிருந்து பெறமுடியுமா? மேலும் எனக்கும் எனது காரியஸ்தர்களுக்கு மிடையில் எனது தாயாருமல்லவோ விஷமம் செய்து கொண்டிருக்கிறாள். நான் இங்கிருந்தால் அதிக

செலவாகிறதென்பதற்காக என்னைக் கிராமத்துக்கு அனுப்பி விடுவதென்றும் அவர்கள் நினைத்திருக்கிறார்கள்.

கமல:—ஐயையோ! நீங்கள் சொல்லும்போதே எனக்குக் கவலையாக இருக்கிறதே. திடீரென்று உங்களை எங்கேனும் அவர்கள் அனுப்பிவிட்டால் நான் என்ன செய்வது? உங்களைவிட்டுப் பிரிந்திருப்பதென்றாலே எனக்குக் கஷ்டமாக இருக்கிறதே.

தினகரன்:—எனதன்புள்ள கமலகுமாரி! நீ பயப்பட வேண்டாம். நான் அவர்களுடைய இஷ்டப்படி நடப்பதற்கு அவ்வளவு முட்டாள் அல்ல. இன்று நான் எந்த மார்வாரியிடம் கடன் வாங்கப் போனேனோ அவன் உன் கடிதம் கண்டு என்னை வரவேற்றதுடன் என் அந்தஸ்தைக் கண்டு என்னை மரியாதையாக நடத்தியதுடன் இவ்வளவு உயர்ந்த நிலைமையிலுள்ள எனக்கு எவ்வளவு வேண்டுமாயினும் கடன் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறான். ஆகவே இனி நான் என் தாயின் தயவையோ அல்லது கார்டியன்களின் தாட்சண்யத்தையோ எதிர்பாராமல் பணம் பெற்று உனக்கு வேண்டியதைச் செய்வேன். இன்று இரண்டாயிரம் பவுன் கடன் வாங்கியதில் ஆயிரம் பவுன் இருக்கிறது. இதை உன்னிடம் கொடுத்துவிடட்டுமா?

கமல:—இல்லை; இல்லை. இப்போது வேண்டாம், நீங்கள் ஆட்டம் முடிந்ததும் என்னுடன்தானே வரப்போகிறீர்கள் இரவு சாப்பாட்டுக்கும் அங்கேயே ஏற்பாடு செய்திருக்கிறேன். மேலும் நான் எனது புதிய வண்டியைக் கொண்டு வந்திருக்கிறேன்.

தினகரன்:—ஓ, அந்த வண்டி வந்திருக்கிறதா! வண்டியைக்கட்டி முடிக்கிறவன் இன்று பகலில் அதை முடித்து அனுப்புவதாகச் சொன்னான்.

கமல:—ஆம். அவன் தன் வாக்குறுதியின் படியே செய்து விட்டான். என் வண்டியும் அதன் சாமான்களும் எல்லாம் புதியவையாகவே இருக்கின்றன. அவைகளையும், பெரிய வெள்ளித் தட்டையும் கொடுத்ததற்காக உமக்கு என் வந்தனத்தைச் செலுத்து கின்றேன்.

இனியும் அவர்களுடைய சம்பாஷணையைப்பற்றி நாம் அதிகம் விரித்துரைக்க வேண்டியதில்லை. நாடக மாது கமல குமாரி தன்னுடைய தந்திர சாமர்த்தியங்களால் பணத்தின் அருமையே தெரியாதவனும் ஒழுக்கக் கேட்டில் தலை சிறந்த வனுமான தினகரம் பிரபுவை மயக்கி அவனுக்குத் தன்னிடம் மோகம் இருக்கும் வரையில் அவனிட மிருந்து எவ்வளவு அதிகமாக அபகரித்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு அதி கம் பறிப்பதென்று முடிவு செய்தாள்.

அதே திரைக்குப் பின்னால் அக்கூட்டத்திலேயே ஒரு மூலையில் நின்றிருந்த ஒரு பெண்ணைக் கவனிப்போம். அவள் சுமார் பதினாறு வயதுடைய பெண். முதலில் அவளைப் பார்க்கும்போது அழகுடையவளைப்போல் தோன்றுது. ஆயி னும் அவளை நெருங்கி உற்று நோக்கினால் அவள் அழகுள்ள வள் மட்டுமன்றி அடக்கமும் உடையவள் என்பது விளங் கும். அவள் ஏதோ வருத்தத்துடன் இருந்தபடியால் அங்கு பல ஆடவரும் மாதரும் குஷாலாகப் பேசிக் கொண்டும் விளையாடிக்கொண்டு மிருந்தும் அவள் அதில் கவலையோ உற்சாகமோ செலுத்தாமல் தலையைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டு ஊக்கமின்றி நின்றிருந்தாள். அவ ளும் மெலிந்த தேகமுடையவளாக இருந்தா ளென்றாலும் அவ ளுடைய அங்கங்களெல்லாம் பூரண வளர்ச்சியைப் பெற்றுக் கண்டோர் மனம் கவரும் தோற்றத்தை யுடையனவாக இருந்தன. அப்பெண்ணின் பெயர் கோகிலம். அவள்

சொற்பகாலயாகவே நாடகத்தில் சேர்ந்தவளாக இருந்தாள். அவளுக்கு வாரத்துக்கு ஒரு பவுன் வீதம் சம்பளம் கொடுத்து வந்தார்கள்.

அவள் அவ்வாறு தனியே கவலையுடன் நின்றிருந்ததற்குக் காரணம் என்ன? அவ்வளவு வாலிபர்கள் அவளை ஆசையுடன் நோக்கும்போது அவள் அதையெல்லாம் கவனியாமல் நின்றிருந்ததேன்? அவள் அப்போதும் கற்பை முழுதும் இழந்துவிடாமல், விபசாரம் செய்யவேண்டுமே, அப்படிப் பட்ட வாழ்க்கையில் பகவான் வைத்துவிட்டாரே என்னும் கவலையுடன் இருந்தாள். ஆயினும் அவள் பரிசுத்தமான கற்புடன் இருந்தாள். அவள் நல்ல குலத்தில் பிறந்து வளர்ந்தவள். ஒருகாலத்தில் மிக்க சௌகரியமாக வாழ்ந்தாள். ஆயினும் துரதிர்ஷ்டமென்பது ஒரு பெரிய சேனை மற்றொரு சேனையின்மீது உக்கிரத்துடன் பாய்வதேபோல் அக்குடும்பத்தின்மீது பாய்ந்ததால் அவளுடைய தகப்பனார் அவளது இளம்பிராயத்திலேயே இறந்துவிட்டதால் தன் தன் தாயாரைக் காப்பாற்றும் பொருட்டும், தன் இளைய சகோதரனை ஆதரிக்கும் பொருட்டும் வேறு வழியில்லாமல் நாடகத்தில் சேர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று.

கோகிலத்தை அவளுடைய கவலையிலும் கண்டு அவளுடன் பேச விரும்பும் வாலிபர்களெல்லாம் ஒரு காலத்தில் அவளுடன் இரகசியமாகத் தங்கள் காதலியாகும்படி கேட்டு ஏமாற்றமடைந்தவர்களே. ஆதலின் அவர்களெல்லாம் அவள் உபயோகமற்றவளென்றும், அவளைப் பெறுவதற்காகச் சிரமப்பட வேண்டியது அவசியமில்லையென்றும் கருதினார்கள். அவர்களுடைய கண்ணில் அவள் அழகுடையவளாகத் தோன்றவில்லை. யௌவனம் வாய்ந்த வாலிபர்கள் உண்மையான அழகையும், நற்குணத்தையும் கண்டுபிடிப்பதில் கவ

126569.

னம் செலுத்துவதில்லை; அவ்வளவு நிதானபுத்தியும் அவர்களுக்கு இருப்பதில்லை. தளுக்கு என்று சொல்லக்கூடிய வகையில் மேல் வேடம் தரித்த பெண்களைக் கண்டு மயங்கி விடுகிறார்கள்.

சுமார் அறுபத்து நான்கு வயதான ஒரு வயோதிகர், யௌவன ஆடவனைப்போல் வேடமணிந்து கொண்டு கோகிலத்தை உற்று நோக்கினார். அவரது மயிர் நரைத்திருந்ததென்றாலும் அதற்கு அவர் கருக்குத் தைலம் தடவிக்கொண்டிருந்தார். பற்களெல்லாம் விழுந்துபோயிருந்தும் புதிய பொன் பற்களைக் கட்டிக் கொண்டிருந்தார். முகத்திலிருந்து திரை, மூப்புகளெல்லாம் தெரியாமலிருக்கும் பொருட்டு வாசனை மாவைத் தடவிக் கொண்டிருந்தார். விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டிருந்தனர். அவர் இரத்தினபுரியிலிருந்த பிரபல பணக்காரர்களில் ஒருவர். தாசிலோலனாய்த் திரிவதில் இவருக்கு இணையானவர் அந்நகரில் எவருமே இல்லை யென்று நிச்சயமாகக் கூறலாம். எந்தப் பெண்ணைப் பார்த்தாலும், அவள் எவ்வளவு சிறு வயதினளாயினும் உடனே அவளைத் தொட்டுப் பார்க்காவிட்டால் அவருக்குச் சரிப்படாது. அவரது பெயர் தர்மலிங்கம் பிரபு.

அவர் கோகிலத்தைக் கண்டு, 'அன்புள்ள கோகிலமே! நீ ஏன் தனியாக நின்று கொண்டிருக்கிறாய். அதோ பார்! இக் கூட்டத்தில், ஒவ்வொரு மாதும் ஒவ்வொரு ஆடவனுடன் கேளிக்கையாகப் பேசிக் கொண்டிருக்கிறாள். நீதான் இவ்வாறு தனிமையாக இருக்கிறாய்,' என்று கேட்டார். அதற்கு அவள், 'பிரபுவே! நான் அப்படிப்பட்ட சிநேகிதர் எவரையும் பெறவில்லை. சிநேகிதர் ஒருவர் வேண்டுமென்று நான் தேடிச் சென்றதுமில்லை. நீங்களும் எத்தனையோ முறை என்னை இவ்வாறு கேட்டிருக்கிறீரே! நான்

எதற்கேனும் சம்மதிக்கிறேனா?' என்றாள். உடனே அவர், 'அன்புள்ள பெண்ணே! இனியும் நீ அப்படிச் சொல்லலாகாது. நான் உனது காதலனாக இருக்க விரும்புகிறேன். நீ இவ்வாறு கவலையுடன் கூடிய முகத்துடன் இராமல் சந்தோஷமாக இரு. நீ சிரிப்பதைக் காண நான் ஆவலுடையவனாக இருக்கிறேன்' என்று தெரிவித்தார்.

அதற்கு அவள், 'எனக்குச் சிரிப்பும் கூடவா?' என்று சொல்லிவிட்டு அதிக நேரம் அவருடன் பேச சம்மதமற்றவளாய் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட முயன்றாள். அப்போது தர்மலிங்கம் பிரபு, 'பெண்ணே! போகவேண்டாம். இங்கேயே நில். நான் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி உன்னிடம் பேச வேண்டியதாய் இருக்கிறது' என்று கூறினார். அவளும் அது என்ன விசேஷமோ என்று நினைத்து உடனே பிரபுவின் பக்கமாகத் திரும்பி நின்று அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று கேட்க மிக ஆவலுடையவள் போல அவரது முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள். அப்போது அவர், 'கண்மணி! நீ சந்தோஷமாக இருப்பதைக் காண நான் விரும்புகிறேன். உன்னைச் சுற்றிலும் பார். எல்லாருடைய முகத்திலும் சந்தோஷக் குறி காணப்படுகிறது. உதாரணமாக, கமலகுமாரியைப் பார். அவளும் தினகரம் பிரபுவும் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவள் இப்போது தினகரனுடைய ஆதரவில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட ஒரு பிரபுவின் ஆதரவில் இருக்கும்போது சந்தோஷமாக இருப்பது சகஜந்தானே?' என்று கூறினார்.

அவர் எதையோ பேசப்போகிறார் என்று எதிர்பார்த்த அவள், பிரபுவின் வாயிலிருந்துவந்த சொற்களைக் கேட்டதும் ஏமாற்றமும் துக்கமும் அடைந்தவளாய் அவ்விடத்தை விட்டு

மீண்டும் புறப்பட முயன்றபோது அவர் அவளை விடாமல் இருக்கச் சொன்னதுடன் துணியைப் பிடித்து இழுப்பாரோ என்று அஞ்சியதால் ஒரு பக்கமாக நின்றுகொண்டாள். அவள் மெதுவாக, 'பிரபுவே! தயவு செய்து என்னை விட்டு விடுங்கள். வீண் தொந்தரை செய்யவேண்டாம்!' என்று கெஞ்சிக் கேட்டாள். அப்போதும் அவர் அவளுடைய பரிவுடன் கூடிய கோரிக்கையை லட்சியம் செய்யாமல் அவளது அழகைக்கண்டு அதிகம் மோகித்தவராய், 'பெண்ணே! நான் ஒரு பெரிய பணக்காரன் என்பதை நீ அறிந்திருக்கலாம். நான் எவ்வளவு பெரிய பணக்காரனே அவ்வளவு தாராளமாகச் செலவு செய்பவன். உன்னிடம் சில முக்கிய விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று* சொன்னேனல்லவா? அன்றிரவு நான் பல விஷயங்களை உன்னிடம் பேசியபோதே நீ அவைகளையெல்லாம் நம்பாமல் நான் எதையோ பிதற்றுகிறேன் என்று நினைத்தாய். என்னை லட்சியம் செய்யாமல் போய்விட்டாய். ஆனால் நான் உன்னை இப்படிக் கஷ்டத்தில் விட முடியாது. இந்நகரில் ஒரு பெரிய மாளிகையையும், அம்மாளிகை நிறைய சாமான்களையும், ஒரு பெருந் தொகையையும் கொடுப்பதென்று நிச்சயித்திருக்கிறேன். உனக்கு வேண்டிய இன்னும் பல சௌகரியங்களையும் செய்து தருவேன். நீ இந் நாடகக் கம்பெனியை விட்டு விடவேண்டும். நாடக மாது என்னும் இழிவான பெயர் போய் சீமாட்டி என்னும் கௌரவமான பெயருடன் நீ வாழவேண்டும். மேலும் உன் பெயருக்கே தகுதியான சொத்தையும் எழுதிவைத்துவிடுவேனதலால் நான் இறந்து போனாலும் அந்த சொத்து உன்னை விட்டு அகலாது! கோகிலம்! உனக்காக நான் இவ்வளவும் செய்வேன். இந்த என் உத்தேசத்தை உன்னிடம் தெரிவிக்கவே நான் இப்போது

இங்கு வந்தேன்! என்று விவரமாகத் தன் எண்ணத்தைத் தெரிவித்தார்.

அவள் சிறிது சிறிதாக அவருடைய சொல்லில் மயங்கு வது அவளுக்கே தெரிந்தபடியால் அவளது தேகம் முழுதும் நடுங்கிற்று. பெருஞ் செல்வம் அவளுக்கு எளிதில் கிடைக் கும்போலிருக்கிறது. வறுமை என்னும் மகா கொடிய பதமே தன் காதில் விழாதபடி அவள் சுகமாக வாழ்க்கையை நடத்தலாம். மேலும் நாடக மேடையில் ஏறிக் கண்டவர் மனம் களிக்கும்படி செய்ய முயல்வதைவிட, பல வாலிபர் கள் தன்மீது கண் போடுவதற்கு இடம் கொடுப்பதைக் காட் டிலும், ஒரே பிரபுவின் ஆதரவில் இருந்து சுகமாக வாழ்க் கையை நடத்துவது நல்லதல்லவா என்று அவளுக்குத் தோன்றியது. நாடகக் கம்பெனியின் ஆதரவில் படும் கஷ் டங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவளது மனக் கண் முன் தோன்றி, 'சீ இந்த வாழ்வு உனக்கு வேண்டாம்' என்று வற்புறுத்திச் சென்றன. அவ்வளவு கஷ்டப்பட்டும் சுகமான வாழ்க்கையை நடத்த முடிந்ததா என்னும் எண்ணம் உதய மாயிற்று. ஆகவே அவரது ஆதரவில் இருப்பது நலமென் றும் அவளுக்குத் தோன்றியது.

ஆனால் அந்தோ! பிரபுவின் ஒரு எண்ணமல்லவா அவளை மனங்கலங்கச் செய்கிறது. அப்பிரபு மிக்க தர்ம குணமுடையவராய், இரக்கத்துடன் அவளுக்கு அவ்வளவு பெரிய சொத்தைக் கொடுப்பதாக நினைத்திருந்தால் அவள் அவரது காலில் விழுந்து நமஸ்காரம் செய்திருப்பாள். அவ ரையே தெய்வமாக வழிபட்டிருப்பாள். அவரது காத்தை ஆனந்தக் கண்ணீரால் நனைத்திருப்பாள். அவரது விகார சொரூபத்தையும் மற்றவற்றையும் கவனியாது ஒரு குமாரி தன் தந்தையைத் தழுவிக் கொள்வதுபோல் அன்புடன் அவ

ரைத் தழுவிக் கொண்டு கூத்தாடி இருப்பாள். ஆனால் அவர் தர்மவான், உபகாரி என்னும் முறையில் அவ்வளவும் கொடுக்க விரும்பவில்லை யல்லவா? அவருக்கு அவளிடம் ஏற்பட்டிருக்கும் மோகத்தினால்தானே கொடுக்கமுன்வந்தார். அவள் தனக்கு உண்மையில் காதல் ஏற்படாத ஒருவரிடமல்லவோ தன் கற்பைக் கேவலம் பணத்துக்காகவும், இவ்வுலக சுகத்துக்காகவும் இழக்க வேண்டியதாய் இருக்கிறது. உண்மையானதும் பரிசுத்தமானதுமான நட்பின் காரணமாக ஒரு பைசாவையேனும் கொடுக்க அவர் தயாராக இருக்கிறாரா?

ஆகவே அவள் தன் கற்பை எக்காரணத்தைக் கொண்டும் இழப்பதில்லை யென்று முடிவு செய்துவிட்டாள். சிறிது நேரம் அவளது புத்தி தடுமாறியதற்கும் அவளது வறுமை நிலைமையும், அவள் தன் தாயையும், சகோதரனையும் காப்பாற்ற வேண்டியிருந்த பொறுப்புமே யாகும். ஆயினும் அவள் தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதில் உறுதியுடையவளாக இருந்ததால் புத்தி தடுமாற்றமும் நிமிஷத்தில் ஒழிந்து போய் உறுதியுடன், 'பிரபுவே நீங்கள் என்ன சொன்ன போதிலும் சரி. அதெல்லாம் பிரயோசனப்படாது. நான் உங்களுடைய யோசனையை எதிர்க்கிறேன். உங்கள் உதவியைப் பெற்றுக் கொள்ள நான் தயாராக இல்லை,' என்று கூறிவிட்டு அவள் திடீரென்று அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

கோகிலம் ஒரு தனியறைக்குச் சென்று அங்கு சிறிது நேரம் தனியாகப் பல விஷயங்களைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தாள். மணியடித்து அவள் அழைக்கப்பட்டதும் நாடக மேடைக்குச் சென்று தன் வேடத்தை மிகத் திறம்பட நடித்துக்காட்டி ஆடல் பாடல்களில் புத்தியைச்

செலுத்தினள். மனதில் எவ்வளவோ துக்கமிருந்தும், மனக் கண் அளவிலா கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தும் வெளி யில் அதிக சந்தோஷ முடையவள்போல் புன் சிரிப்புடன் கூடிய முகத்தோடு தன் மற்ற வேலைகளைக் கவனித்தாள்.

இந்த அத்தியாயத்திலேயே கூறப்பட்ட கமலகுமாரியை யும், கோகிலத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! கமலகுமாரி அதிக சம்பளம் பெற்றதால் அதைக் கொண்டே எவ்வளவோ சுகமாகக் காலங் கழிக்கலாம். அப்படியிருந்தும் அவள் ஒழுக் கக் கேடு உடையவளாய்க் கற்பைச் சிறிதும் மதியாமல் இன் னும் அளவுகடந்த சுகபோகங்களை அனுபவிக்க வேண்டு மென்பதற்காகத் தன் மானத்தைக் கண்டவர்களுக்கெல்லாம் விற்றுத் தொலைத்தாள். அவளுக்குப் பணமும் இன்பமும் அதிகமாகத் தோன்றியதே தவிர நற்குண நல்லொழுக்கம் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனல் கோகிலமோ மிக ஏழை யாக இருந்தும், உபாய ஊதியம் பெற்றும், தினசரி ஜீவனத் துக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தும் ஒழுக்கத்தையே பெரிதாக மதித்தபடியால், தர்மலிங்கம் பிரபு போன்றவர்க ளெல்லர்ம் கனகாபிஷேகம் செய்வதாகச் சொன்னதையும் அவள் பொருட்படுத்தாமல் தன் கற்பைக் காப்பதில் சிரத்தை யுடையவளாக இருந்தாள். உண்மையிலேயே கோகிலம் ஒரு உத்தமி! நாடக மாதர்களிலும் கோகிலம் போன்ற மிகச் சிலர் கற்புடனும் ஒழுக்கத்துடனும் இருக்கின்றனர். கடவுள் கிருபையால் பெண் சமூகத்தின் அந்தஸ்தையும் கௌரவத்தை யும் நிலை நிறுத்துவதற்காகக் கோகிலம் போன்ற ஒரு சில மாதர்கள் இன்றளவும் நம் பெண் சமூகத்தில் இருந்து வரு கின்றனர். அப்படிப்பட்ட உத்தமிகளைப்பற்றி நினைக்கும் போதும் மனதிற்கு ஒருவித சந்தோஷமும் உற்சாகமும் ஏற்

படுகிற தல்லவா? உத்தமிகள் நாட்டில் பெருகினால்தான் ஒவ்வொரு தேசமும் முன்னேற்றமடைய முடியும்.

## 22-வது அத்தியாயம்

—:o:—

### கோகிலமும் அவளது தாயும்

முன் அத்தியாயத்தில் கூறியபடி அன்றிரவு நாடகம் ஆரம்பமானதும் நடிணத்தில் பிரசித்தி பெற்றவளும் அழகிற் சிறந்தவளும் நாடகப் பிரியர்களால் பெரிதும் விரும்பப் படுபவளுமான ராஜலட்சுமி அதற்குமுன் எப்போதும் நடந்திராத வகையில் அவ்வளவு உற்சாகத்துடனும், சாமர்த்தியத்துடனும் பாதநாட்டியக் கலைவல்லார் பாராட்டும் வகையில் அனைவரும் சந்தோஷிக்கும்படி நடித்துக் காண்பித்தாள். அவள் உண்மையிலேயே அங்குக் கூடியிருந்தவர்களை மயக்க வேண்டுமென்றோ அல்லது வேறு எண்ணமின்றியோ நடித்தபடியாலும், அவளும் நடினத்தில் தேர்ச்சி பெற்றவளாய்த் திறம்பட நடிக்க முடிந்தது. ஜனங்களும் கண்டு களித்தனர். அவள் தேகத்திலிருந்து, பரிசுத்த ஆத்மா வெளிப்படுவதேபோல் சுத்த ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவளுடைய சாந்த முகத்தையும், பரிசுத்த பார்வையையும் நோக்கும்போதே அவளைக் கெட்ட எண்ணத்துடன் பார்ப்பவர்கள் தலைகுனிய வேண்டியதுதான். முதலில் சொற்பநேரம் அவள் தனியாகவும், பிறகு மற்றும் இரண்டு பேருடனும் நடித்துப் பற்பல விதமான திறமைகளையெல்லாம் காண்பித்தாள். அவள் அடக்கம் ஜனங்களுக்கு பரிசுத்த எண்ணத்தை தூண்டியது.

ராஜலட்சுமி தன் நடனத்தை முடித்துக்கொண்டு போன

பின்னர், மற்றவர்கள் நடித்ததெல்லாம் அவளுடைய நடனத்தினின்றும் அதிகம் மாறுபட்டிருந்தது. ஏனெனின், பின்னர் வந்து நடித்தவர்கள் எல்லாம் அற்ப புத்தியுடையவர்கள். தங்களை யாரேனும் ஆடவர்கள் பார்த்து மெச்சுகிறார்களா என்னும் எண்ணத்துடனேயே நடித்தார்கள். ஆதலின் பல வாலிபர்களும் அவர்களைப்பார்த்துப் பலவிதமாகப்பேசத் தொடங்கினர். ஆனால் அவர்களிலும் நமது கோகிலம் மட்டும் பரிசுத்தமான மனமுடையவள் என்பதுபற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவள் ஏதோ சந்தோஷ முடையவள் போலத் தோன்றினாலும் மனதில் துக்கமுடையவளாய் இருந்ததால் நடினத்தில் அவளுக்கு ஊக்கமோ, உற்சாகமோ இருக்கவில்லை. அம்மேடையில் தோன்றிய இன்பக் காட்சிகளைப் பார்க்கும்போது அவளுக்குத் தன் வீட்டில் தன் தாயாரும் தம்பியும் கஷ்டப்படுவது ஞாபகத்துக்கு வந்து விட்டது. ஆகவே அவள் திடீரென்று கவலை அதிகப்பட்டவளாய் அங்கிருக்க முடியாமல் கண்ணீர் வடித்துக்கொண்டே மேடையை விட்டுப் போய் விட்டாள். அவள் அவ்வாறு நடனத்தின் இடையில் போய்விட்டதால் ஜனங்கள் கோபித்துக் கொள்வார்களோ என்று நினைத்து அதன் நிர்வாகஸ்தர் அவள் மீது கோபித்துக் கொண்டார். ஆயினும் அவள் தனக்கு உடம்பு சௌகரியமில்லை யென்றும், தன்னுடைய நடனம் அவ்வளவு முக்கியமானதல்ல வாகையால் எத்தகைய புகாரும் வாராதென்றும், திடீரென்று வந்து விட்டதற்காக மன்னிக்க வேண்டுமென்றும் சொன்னதால் அவரும் அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் இருந்து விட்டார்.

உடனே அவள் அவ்விடத்தை விட்டகன்று கண்களில் நீர் பெருக ஏதேனும் ஒரு அறையில் புகுந்து கொள்ளும் பொருட்டுச் சுற்றிலும் இருந்தவர்களைக் கவனியாமலும் ஓடி

ளுள். அப்படி அவள் ஓடியபோது ஒரு அறையில் அது யாருடைய அறையென்று கவனியாமலும் புகுந்தாள். ஆனால் அது அவளுடைய தவறு அல்ல. அவள் தெரியாமல்தான் அதில் நுழைந்து விட்டாள். கண்ணீர் கண்ணை மறைத்திருந்தாலும், அவள் மனம் குழப்பமடைந் திருந்ததாலும் அதில் யார் இருக்கிறார்களென்றும் முதலில் தெரியவில்லை. சிறிது நிதானித்துப் பார்த்ததில் தான் பிரசித்தி பெற்ற ராஜ லட்சுமியின் முன் இருப்பதை அறிந்தாள். அப்போதுதான் அவளுக்குத் தான் தவறாக அந்த அறையில் புகுந்து விட்டதாகத் தெரிந்தது.

அவ்வாறு அவள் தவறுதலாக அவ்வறையில் புகுந்து விட்டதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முயன்று நடுக்கத்துடன் வாய் குழற சில வார்த்தைகளைப் பேச ஆரம்பித்த போது ராஜலட்சுமி பெருந்தன்மையான அன்புடனும் அபிமானத்துடனும், 'நீ தெரியாமல் இங்கு வந்துவிட்டாய். அச்சப்படாதே. ஐயோ தெய்வமே! ஏன் அழுது கொண்டிருக்கிறாய்? இங்கு வந்துவிட்ட பயத்தினால் அல்லவே' என்று கேட்டாள். அதற்கு அவள், உங்களுக்குக் கோபம் வந்து விட்டதோ என்பதற்காக நான் அழவில்லை. நீங்கள் தான் இவ்வளவு அன்புடன் பேசினீரே? எனக்கு இப்படிப் பேசியவர் ஒருவருமில்லை? என்று கூறிக்கொண்டே அழுததால் ராஜலட்சுமியின் மனம் உண்மையில் கரைந்தது. அவளிடம் ஏதோ ஒருவிதமான அபிமானமும் அனுதாபமும் உண்டாயிற்று. ஆதலின் தன் தோழி விஜயவல்லியை அழைத்துத் தன் அறையின் கதவை உள்பக்கம் சாத்தும்படி சொன்னாள்.

பிறகு ராஜலட்சுமி கோகிலத்தின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, 'இதோ இந்த ஆசனத்தில் உட்காரு. நீ ஏன் அழுகிறாய் என்பதைத் தெரிவி' என்று கேட்டாள். இருவரும்

கடினமாதர்களே யென்றாலும் இவ்விருவரின் அந்தஸ்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் போன்ற வித்தியாச மிருக்கிற தல்லவா! ராஜலட்சுமி ஒரு பெரிய எஜமானிபோலவும் கோகிலம் அவளது வேலைக்காரிபோலவும் இருக்கிறார்கள். அப்படி யிருந்தும் ராஜலட்சுமி கோகிலத்தை அவ்வளவு அன்புடனும் அனுதாபத்துடனும் விசாரித்ததிலிருந்தே அவளுடைய பெருந் தன்மையும் உதார குணமும் நன்கு தெரிகிற தல்லவா? இதனால் அவளுக்குச் சிறிதுசந்தோஷமும் உற்சாகமும் அதிகரித்தது. கேட்பாரற்ற நம்மை இவ்வளவு அன்புடன் வரவேற்றாளே என்பதுதான் அவளுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. மேலும் ராஜலட்சுமி தன் தோழியிடம் சொல்லிக் கோகிலத்துக்கு ஒரு டம்ளரில் சிறிது திராட்சை ரசம் அளிக்கும்படி சொன்னாள்.

அந்தத் தோழியும் அவ்வாறே கொண்டு வந்து கொடுத்தாள். விஜயவல்லி என்னும் அத்தோழியும் தன் எஜமானியைப் போலவே மிகவும் நல்லவள், அவளுக்கு முப்பதுக்கு மேல் நாற்பது வயதுக்குள் இருக்கும். அவளும், 'அன்புள்ள குழந்தாய்! இதை எடுத்துக்கொள்' என்று சொல்லி அம் மதுபானத்தைக் கொடுத்தாள். கோகிலம் மிக்க அயர்ச்சியுடையவளாக இருந்ததால் அச்சமயத்தில் அப்பானம் அவளுக்கு வேண்டியதாக இருக்கவே அதைப் பருகலா மென்னும் உத்தேசத்துடன் தன் வாயினருகில் கொண்டுபோனாள். இதற்குள் அவளுக்குத் தன் தாய், சகோதரன் ஆகியோரின் ஞாபகம் வந்து விட்டது. அம் மதுபானம் தன் தாயாருக்கும், பிஸ்கோத்து முதலிய தின்பண்டங்கள் தன் சகோதரனுக்கும் பயன் படுமே என்று நினைத்து அவற்றை அப்படியே ஒரு பக்கம் எடுத்து வைத்துக் கொண்டாள். அவர்கள் ஞாபகம் வந்ததால் உடனே அவளுக்கு அழுகையும்

வந்து விட்டது. ஆகவே அவள் தன் மெலிந்த இருகாங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி யழுதாள்.

அதைக் கண்டதும் ராஜலட்சுமி உடனே அவளைச் சமாதானப் படுத்த முயலவில்லை. ஏனெனின் அவள் தன் மனம் ஓயும்படி சிறிது அழுது விட்டால்தான் விரைவில் சமாதானமுண்டாகு மாதலால் சொற்பநேரம் பொறுத்துக் கொண்டிருப்போமென்று இருந்து விட்டாள். சிறிது நேரமானதும் ராஜலட்சுமி கோகிலத்தைப் பார்த்து, 'உன்னை வருத்துகின்ற விஷயம்தான் என்ன? உன் துக்கத்தை மாற்ற என்னால் முடியுமாயின் அதைத் தவறாமல் செய்வேன். பயப்படாமலும் வெட்கப் படாமலும் என்னிடம் சொல்' என்று பரிந்து கேட்டாள். உடனே கோகிலம் தன் முகத்திலிருந்த கையை அப்புறப் படுத்திக்கொண்டு, 'அம்மா! உங்களுக்குத் தெரியாத விஷயமென்ன இருக்கிறது? ஒருவருக்கு மனதில் துக்கம் நிறைந்திருக்கும்போது, அதிக சந்தோஷ முடையவர்போல் பாவனை காட்டி மேடையில் நடிப்பதென்பது அருவருக்கத் தக்க வேலை யல்லவா? அப்படிச் செய்ய நேரிட்டால் துக்கமாகத்தானே இருக்கும்' என்று கேட்டாள்.

அதற்கு ராஜலட்சுமி, 'உன்னுடைய விவகாரமும் இப்படித்தான் இருக்கிறது போலும்! அதையாவது நன்றாகத் தெரிவி' என்று கேட்டதும் கோகிலம், 'ஆம், அம்மா! இப்போது கூட மேடை மீது நடித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று என் தாயாரும் தம்பியும் படும் கஷ்டம் ஞாபகத்துக்கு வந்ததும் துக்கம் அதிகரித்து அழுகையும் வந்து விட்டது. என்ன செய்வேன்' என்று தெரிவித்தாள். அதற்கு ராஜலட்சுமி, 'நீ உன் பெயர் முதலிய எல்லா வரலாறுகளையும் விவரமாக என்னிடம் தெரிவித்தால் என்னால் இயன்றதைச் செய்வேன்' என்று கேட்க கோகிலமும் தன்னைப்

பற்றிய விஷயங்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொண்டாள். பிறகு அவள், 'அன்புள்ள மாதே! இவ்வளவு கஷ்டத்தையும் அனுபவிப்பது சிரமாகத் தெரியவில்லை. இடையிடையே சில ஆடவர்கள் செல்வத்தைக் காட்டித் தவறான வழியில் செல்லும்படி தூண்டுகிறார்களே அதுவும், சில சமயங்களில் புத்தி தடுமாறுகிறதே அதுவும்தான் மிகக் கஷ்டமாக இருக்கிறது!' என்று கூறியதும் வெட்கத்துடன் தலையைத் தொங்க விட்டாள். ஏனெனின் அத் தூண்டுதலுக்கு இணங்கவும் கூடும் என்னும் தன்னுடைய பலஹீனத்தைக் காட்டிக் கொண்டதால் அவளுக்கு வெட்கமாய் விட்டது.

இதை யெல்லாம் கேட்ட ராஜலட்சுமி, மீண்டும் கோகிலத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, 'பெண்ணே! உனக்கு நான் சிறிதேனும் உதவி செய்ய விரும்புகிறேன். அதை நீ பெற்றுக்கொண்டு தானாகவேண்டும். ஆனால் அதைப்பற்றி ஒருவரும் ஒன்றும் அறிய வேண்டியதில்லை. நீ இந்தத் தொழிலில் இன்னும் நீடித்திருக்க விரும்பவில்லையானால்' என்று எதையோ சொல்லப் போனவள் அதிகமாக உறுதி மொழி கூறி விடலாகா தென்னும் எண்ணத்துடன் பேச்சைத் திருப்பி, 'எதையும் பின்னால் சாவகாசமாகப் பேசுவோம். அதோ என் மேஜை மீது எழுதுவதற்கு வேண்டிய சாமான்கள் இருக்கின்றன. உன் விலாசத்தை எழுதிக் கொடுத்து விட்டுப் போ. நாளையதினம் உனது வீட்டுக்கு ஒருவர் வருவார். அவர் உனக்கு வேண்டிய உதவியைச் செய்யப் பிரியமுள்ளவராக இருப்பார்' என்று கூறிக் கொண்டே அங்கிருந்து எழுந்து சென்று இன்னொரு மூலையில் ஒரு மேஜையின் மீது இருந்த அவளுடைய மணிபர்ஸை எடுத்து அதிலிருந்து சில நாணயங்களை ஒரு கடிதத் துண்டில் மடித்துக் கொண்டுவந்து கோகிலத்தின் கையில் கொடுத்து;

'இத்தொகை இப்போது உன்னுடைய அவசர செலவுகளுக்குப் போதும். இதை வைத்துக் கொள்' என்று சொன்னாள். அப்போது அவள் ராஜலட்சுமியின் கரத்தைத் தன் உதட்டில் வைத்து அழுத்தி ஏதோ உபசார வார்த்தை சொல்ல முயன்றா ளென்றாலும் அவளுக்குத் துக்கம் ஒரு புறமும், அளவு கடந்த சந்தோஷம் ஒரு புறமும் தாக்கிய படியால் ஒன்றும் பேச முடியாமல் நின்றாள்.

அவளது நிலைமையை நன்கு உணர்ந்த ராஜலட்சுமி, 'என தன்புள்ள சினேகிதையே! நீ உடனே வீட்டுக்குப் போ. நான் உன்னை மறந்து விடுவேனோ என்று பயப்பட வேண்டாம்? என்று தேறுதல் கூறினாள். அப்படியே அவளும் அவ்விடத்தைவிட் டகன்றாள். ஆனால் அப்படிப் போகும்போது அவள் எத்தகைய உணர்ச்சியை அடைந்திருப்பா ளென்பதை நாம் விவரிப்பதைவிட வாசகர்களே யூகித்துக் கொள்வது எளிய காரியமாகும். ராஜலட்சுமி எதையோ கொடுத்து விட்டாள் என்பதற்காக அவள் சந்தோஷப்பட்டு விடவில்லை. ஏனெனின் அக்கடிதத்தில் எவ்வளவு இருக்கிற தென்பது அவளுக்குத் தெரியா தல்லவா? ஆயினும் உயர்தர அந்தஸ்திலுள்ள ராஜலட்சுமி கேவலம் தன்னையும் ஒரு பொருட்டாக மதித்து என தன்புள்ள சினேகிதையே என்று அழைத்ததுதான் அவளுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்து விட்டது. உண்மையிலேயே நாடக உலகில் பிரசித்தி பெற்றவளும், அதிக நல்லொழுக்க முடையவளென்று பெயர் வாங்கியவளுமான ஒருத்தியின் அனுதாபத்தையும் அன்பையும் பெற்றது மகிழ்ச்சிக் குரியதே. ஆதலின் இச்சம்பவம் ஒரு கனவோ என்றும் அவள் நினைத்தாள்.

கோகிலம் ராஜலட்சுமியின் அறையைவிட்டுப் புறப்பட்

டதும் தன் உடையை மாற்றிக்கொள்ளவேண்டிய அறைக்குச் சென்று முகத்திலுள்ள மாவைத் துடைத்துவிட்டுத் தன் சொந்த எளிய உடையை அணிந்துகொண்டாள். அவள் தாயார் நோயாளியாக இருந்தபடியாலும், அவளது சகோதரனே ஒரு பைசாவும் சம்பாதிக்கமுடியாத ஏழு வயது சிறுவனாக இருந்தபடியாலும், தனக்குக் கிடைக்கும் உபாய வரும்படியில் அவர்களையும் ஆதரித்துத் தானும் ஜீவிக்க வேண்டுமென்றால் எளிய வாழ்க்கையைவிட வேறு எவ்வாறு வாழ முடியும். அவள் உடையை மாற்றியபோது அதே அறையில் மற்றும் பலர் இருந்ததால் அப்போதோ அல்லது வீட்டுக்குப் போகும்வழியிலோ அவள் ராஜலட்சுமி கொடுத்த தொகை எவ்வளவு என்பதைப் பார்க்கவேயில்லை. ராஜலட்சுமி தன்னிடம் அவ்வளவு அன்புடனும் அனுதாபத்துடனும் தாராள சிந்தையுடனும் நடந்துகொண்டிருக்கும்போது, தானம் கொடுத்த மாட்டைப் பல்பிடித்துப் பார்ப்பதுபோல், அவள் எவ்வளவு கொடுத்திருக்கிறாள் என்று சுயநல புத்தியுடன் அத்தொகையை எண்ணிப் பார்ப்பது அற்ப காரியமென்று அவள் கருதினாள். இச் சந்தர்ப்பத்தில் அனுதாபம் காட்டப்பட்டது பெரிதேயொழிய பணம் எவ்வளவென்பது பெரிதல்ல என்று அவள் நினைத்தது சரியேயாகும்.

பிறகு நாம் இரத்தினபுரியில் ஏழைகள் வசிப்பதும் அவ்வளவு நாகரிகமாக இல்லாததுமான இடத்திலிருந்த ஒரு வீட்டின் ஒரு அறையில் நடப்பதைக் கவனிப்போம். அப்போது விடியற்காலை மணி இரண்டு இருக்கும். சிறிய மெழுகுவர்த்தி விளக்கு ஒன்று மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அந்த சிறு வெளிச்சத்தில் பார்த்தாலும் அவ்வறையில் யாரோ ஏழைகள் இருப்பது தெரிந்தது. சொற்ப சாமான்களே அவ்வறையில் இருந்தனவென்றாலும் அவை மிகச் சுத்தமாக இருந்

தன. அங்கிருந்த எளிய படுக்கையொன்றில் சுமார் நாற்பது வயதான மாது படுத்திருந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது. கை கால்களெல்லாம் பலஹீனத்துடன் ஒய்ந்திருந்தன. கண்களில் சிறிதும் பிரகாசமில்லாமல் இருண்டிருந்தது. அவளுக்கு எமன் நெருங்கிவிட்டானே என்றே சந்தேகிக்கவேண்டிய நிலைமையில் அவள் மெலிந்திருந்தாள். அம்மாதினருகில் ஒரு சிறு அழகிய பையன் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். அந்த ஏழு வயது சிறுவனுடைய கூந்தல் ஒரு பெண்ணின் கூந்தலைப்போல் கருப்பாயும் வழ வழப்பாயும் இருந்தது. நோயுடன் படுத்திருந்த அவனது தாய் துக்கத்துடன் தன் குமாரன்மீது சாய்ந்து தனக்கும் தெரியாமல் ஓரிரண்டு துளி கண்ணீரையும் விட்டாள்.

அப்போது அவள் மனதில் நினைத்ததாவது:—ஐயோ! குழந்தையே! உன் கதி எவ்வாறாகுமோ? உன்னைப் பாது காக்கவோ அல்லது உன் கதியைக் காணவோ நான் உயிருடன் இருக்கப்போவதில்லை. கூடிய விரைவிலேயே எமன் என்னைத் தன் சொத்தாகக்கொண்டுவிடுவான் என்று நினைக்கிறேன். ஓ, சர்வ சக்திவாய்ந்த கடவுளே! இந்தத் திக்கற்ற ஏழைக் குழந்தைக்கு உன் காருண்யத்தைக் காட்டு. இக்குழந்தை எத்தகைய துன்பத்தையும் எவருக்கும் செய்ததில்லையே! செய்வதற்கும் சக்தியற்றதாக இருக்கிறதே! ஐயோ, ஐயோ; என் கதியே! இக்குழந்தை எனக்குப் பிறக்காமலேயே இருக்கலாம். குழந்தையே; உன்னைச் சுகமாகவும் சௌகரியமாகவும் வைக்கக்கூடிய நிலைமையில் நான் இருந்திருந்தால் உன்னைப் பெற்றதில் அதிக சந்தோஷப்படுவேன். ஆனால் உண்மையில் நமது நிலைமை என்ன? வறுமை என்னும் கொடிய பேய் எங்களைப் பிடித்து வாட்டுகிறதே! பசியும் துயரமும் துக்கமுமல்லவோ நமது விருந்தாக இருக்கின்

றன. உன்னுடைய சகோதரி நம்மிருவருக்காகவும் கஷ்டப் படவேண்டி யிருக்கிறதே என்னும் கவலைதான் எனக்கு அதிகமாக இருக்கிறது. நாம் இருவருமே திக்கற்றவர்களாக இருப்பதால் அவள் நமக்காகக் கஷ்டப்படுகிறாள்.

இவ்வாறு நினைத்துக்கொண்டிருந்த அவள் திடீரென்று வாய்திறந்து ஓவென்ற குரலில், 'கடவுளே! ஜீவகாருண்ய மூர்த்தியே! உன் கிருபையை என் குமாரி கோகிலத்துக்கு அருள் செய். அவளுக்கு ஏற்படும் தூண்டுதல்களையும் கஷ்டங்களையும் கண்டு என்னால் சகிக்க முடியவில்லையே. அவள் கற்பிற் சிறந்தவளாக இருப்பதால் இத் தூண்டுதல்களையெல்லாம் அலட்சியம் செய்கிறாள். ஆனால் அதை எப்படி நம்ப முடியும்? வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் அவள் தூண்டுதலுக் கிணங்கிவிட்டால் என்ன செய்வது? அவள் நாடகக் கொட்டகையில் தன் வேலையைச் செய்துவிட்டு திரும்பி வரும்போதெல்லாம் என் தேகம் முழுதும் நடுங்குகின்றதே. வெளியில்போன அவள் எப்படிப் பரிசுத்தமாகச் செல்கிறாளோ அப்படியே பரிசுத்தமாக வருவளா என்பது சந்தேகமாகவே இருக்கிறதே. எப்போது அப்படிப்பட்ட கெட்ட காலம் வந்துவிடுமோ என்று பயப்படுகிறேன்' என்று அலறினாள்.

இவ்வாறு அவள் துக்கப்பட்டதால் அப்படியே அயர்ச்சியுடன் தன் படுக்கையில் சாய்ந்துவிட்டாள். முகத்தைத் தன் கையால் மூடிக்கொண்டு அழுதாள். அவள் அழுத சத்தத்தால் அச்சிறுவன் விழித்துக்கொண்டு அழ ஆரம்பித்தான். அப் பையன் தன் கையைத் தாயின் கழுத்தில் போட்டு, 'அம்மா! துக்கப்படாதே!' என்று மழலைச் சொற்களால் சொன்னான். அக் குழந்தை அவ்வாறு சொன்னதானது அவளை இன்னும் அதிக துக்கத்துக் காளாக்கிற்றே

யொழிய அதனால் அவள் ஆறுதல் அடையவில்லை. ஏனெனின் அப்போது அவள் மனதில் பலவிதமான சிந்தனைகளும் கவலைகளும் தோன்றலாயின. அப்படிப்பட்ட அன்பும் அபிமானமுமுடைய ஒரு குழந்தை தரித்திரத்திலும் துக்கத்திலும் மூழ்கவேண்டுமென்று விதி இருக்குமானால் அதைக் கண்டு தாய் துக்கப்படுவது சகஜந்தானே. இதுவரை தாயும் தமக்கையுமாகச் சேர்ந்து குழந்தைக்குவேண்டிய அன்ன ஆகாராதிகளையும் இதர சௌகரியங்களையும் அளித்துவந்தார்களென்றாலும் இன்னும் எவ்வளவுகாலம் அவ்வாறு சௌகரியமாக வைத்துக்கொள்ள முடியும்? உதாரணமாக. கோகிலத்துக்கு இப்போதுள்ள தொழில் போய்விடுமாயின் அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! இதையெல்லாம் நினைக்கும்போதே அவள் மனம் பீதியை அடைந்ததென்றாலும் அடிக்கடி மனதில் அந்த நினைப்பு அவளுக்குத் தோன்றாமலிருக்கவில்லை. மேலும் அவள் அப்போது அச்சிறுவனை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு உச்சி முகர்ந்து முத்தாடியதால் அவளது துக்கம் இன்னும் அதிகரித்துவிட்டது. அச் சிறுவனும் அப்படியே தன் தாயின் மார்புமீது படுத்துத் தூங்கிவிட்டான். தாய் அப் பையனின் முகத்தை நோக்கினாள். அப்போது அவளுக்கு மீண்டும் பல எண்ணங்கள் தோன்றலாயின. ஆகவே அவள் வாய்விட்டு அலறிக் கூறியதாவது:—

'ஓ, ஏழைக் குழந்தையே! நீ பிறந்தது முதல் உன் வாழ்நாளில் பெரும்பாகத்தை ஏழ்மைத்தனத்திலும் நோயிலுமே கழிக்கவேண்டியதாயிருக்கிறதே. இந்த அறையில் என்னுடனேயே இருந்ததால் உனக்கு நோயும் மரணமும் சம்பவித்துவிடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறதே. நான் விரைவில் இறக்கவேண்டியதுதான். என்னை எமனுலகம் கொண்டு செல்லவே இந்த நோய் எனக்கு வந்திருக்கிறது. நீ

பிற்காலத்தில் சௌகரியமாய் இருப்பாய் என்னும் நம்பிக்கை இருந்தால் இப்போதே சந்தோஷமாக உயிரை விடுவேன். குழந்தாய்! உனக்கு விளையாடக் கொடுப்பதற்கு விளையாட்டுச் சாமான்களும், உடுப்பதற்கு நல்ல உடைகளும், இனிய ஆகார வகைகளும் கொடுக்க எனக்கு யோக்கியதை இருந்தால் நான் எவ்வளவோ சந்தோஷப்படுவேனே! ஆனால் உன்னுடைய கன்னங்களெல்லாம் வெளுத்திருக்கின்றன. அதற்குக் காரணம் உனக்கு சரியான ஆகாரமும் காற்று வசதியும் இல்லாததேயாகும். நாட்டுப்புறத்தில் எங்கேயாவது நமக்கொரு வீடு இருந்து நீ அங்கேயே தங்கிப் பச்சென்று இருக்கிற நிலங்களில் சுற்றினால் உன் தேகத்தில் இரத்தம் பெருகிவிடுமே. ஆனால் அது ஆகப்போகிற காரியமா? நமக்கு எங்கிருந்து வீடும் மற்ற வசதிகளும் கிடைக்கப்போகிறது. ஏழ்மைத்தனம் என்னும் பேய் நம்மை இரையாகக் கொண்டிருக்கிறதே. கடவுளே! எப்படியாவது இந்தக் கஷ்டங்களையெல்லாம் அனுபவித்துவிடுகிறோம். எனது பெண் கோகிலம் கற்பு கெடாதபடி நீ பார்த்துக்கொள். பசி என்பதற்காக மானத்தை விற்றுவிட முடியுமா? பிறகு மனிதனுக்கும் மிருகத்துக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? இப்போது இருப்பதுபோல் கோகிலம் பரிசுத்தமானவளாக இருக்கும் வரையில் எத்தகைய கஷ்டத்தையும் பொறுமையுடன் சகித்துக்கொள்ளலாம். ஆனால் நாடகக் கொட்டகைக்கு வரும் பல அயோக்கிய வாலிபர்கள் தங்கள் பணத்தால் எனது பெண்ணை மயக்க முயற்சிக்கிறார்களே! அவளும் தனக்காக இல்லாவிட்டாலும் எனக்காகவும் என் குழந்தைக்காகவுமல்லவோ அத் தூண்டுகலுக்கு இணங்கிவிடலாமா என்று சிற்சில சமயங்களில் நினைத்துவிடுகிறாள். அந்த நினைப்பே உறுதியாய்ப் போய் அவள் தன் உறுதியினின்றும் தவறிவிட்

டால் என்ன செய்வது என்பதை நினைக்கும்போதே என் மனம் நடுங்குகின்றதே!

அவள் அவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்தபோது யாரோ ஒருவர் மெதுவாக மாடியின் படிக்கட்டுகளின்மீது ஏறிவரும் சத்தம் கேட்டது. யார் வருகிறார்களோ என்று அம்மாது ஆவலுடன் எதிர்பார்த்தபோது தன் குமாரி கோகிலம் அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைவதைக் கண்டாள். தினசரி அவள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது எப்படி வருவாளோ அப்படியில்லாமல் அவளிடம் சிறிது மாறுதல் காணப்பட்டது. அவள் துக்கமும் துயரமு முடையவள்போலில்லாமல் சிறிது சந்தோஷமும் உற்சாகமு முடையவள்போலக் காணப்பட்டாள். புன்சிரிப்புடன் அவள் தாயின்முன் நின்றாள். அதைக் கண்ட தாய், தன் குமாரி இவ்வளவு சந்தோஷமாக இருப்பதற்குக் காரணம் அவளது சம்பளத்தில் ஏதேனும் சிறிது உயர்வு ஏற்பட்டிருக்கலாம் என்று நினைத்தாள். இதனால் இனி சிறிது அதிக சௌகரியத்துடன் தங்கள் வாழ்க்கையை நடத்தலாம் என்று கருதிச் சந்தோஷமடைந்தாள்.

கோகிலமும் தன் தாயை இறுகத் தழுவிக்கொண்டு, 'ஓ, எனதன்புள்ள தாயே! உன்னிடம் ஒரு சந்தோஷச் செய்தியை அறிவிக்க விரும்புகிறேன். எனக்கொரு நல்ல சிநேகிதர் அகப்பட்டிருக்கிறார்' என்று சொன்னதும் தாய் திகிலடைந்து, 'ஐயோ! பெண்ணே! பதினாறு வயதுடைய ஒரு பெண்ணாகிய உனக்கு ஒரு சிநேகிதர் அகப்பட்டாரென்றால் நான் என்ன என்று நினைப்பது? ஏதேனும் அயோக்கியப் பையல் உன்னை மயக்[illegible] அந்த சிநேகிதர் யார்? விவரமாகத் தெரிவி[illegible] ஆத்திரத்துடனும் [illegible]ப்புடனும் கேட்டாள்.

சென்னை-600 028

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினுபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம்பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

| | | | | |
|---|---|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினுபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# "ஆனந்தபோதினி"

**ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.**

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

**ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| 6-பாகமும் ... | 11 | 10 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | ரத்தினபாய் ... | 1 | 18 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 10 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 2 |
| கனகபூஷணம்2பாகம் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 12 |
| ஆனந்தவிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

---

**விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,**
**லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.**